# பரிபூரண ஜீவன்

# PARIPOORANA JEEVAN

## கர்த்தர்
## நித்தமும் உன்னை
## நடத்துவார்

ஏசாயா 58:11

THE TAMIL DISTRICT COUNCIL OF THE SIAG

January - February 2023
Volume : 63

ஆண்டு சந்தா ₹ 120/-
Issue : 1

# Mission Convention-Sattur Section









Towards Next Level-SFC

SFC Coordinators Meeting - Madurai






## ASSEMBLIES OF GOD
## தமிழ் பிரதேசம்

## எழுப்புதலின் 10 ஆண்டுகள்
### ஜெபக்குறிப்புகள்

ஒரு ஆண்டிற்குரிய இலக்குகளுக்காக ஜெபியுங்கள் 2023

- 35,000 ஜெப பங்காளர்கள்
- 300 புதிய சபைகள்
- 35,000 புதிய அங்கத்தினர்கள்
- 350 கிராம வீட்டு சபைகள்
- 60 மிஷனரிகள்
- 350 மூப்பர் பயிற்சி
- 350 புதிய ஊழியர்கள்

## ஆசிரியரிடமிருந்து........!



# கர்த்தர் நித்தமும் உன்னை நடத்துவார்!

ஏசாயா 58:11

கிறிஸ்துவுக்குள் பிரியமான பரிபூரண ஜீவன் வாசகர்கள் அனைவருக்கும் நம்மை நித்தமும் நடத்தும் நல்ல மேய்ப்பராகிய இயேசுவின் இனிய நாமத்தில் 2023 புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளுகிறேன்! இந்த புதிய ஆண்டு முழுவதும் கர்த்தர் நம்மை அற்புதமாக வழிநடத்துவார். நம்முடைய கர்த்தர் நம்மை நித்தமும் வழிநடத்துகிறவர் என்று வேதம் கூறுகிறது (ஏசாயா 48:17; 58:11). வேதம் முழுவதும் தேவன் எப்படி தேவ மனிதர்களையும், தேவ ஜனங்களையும் வழிநடத்தினார் என்பதை வாசிக்க முடியும். இந்த செய்தியில், நம்முடைய வாழ்க்கையில் தேவ வழிநடத்துதலின் அவசியம் குறித்தும், தேவன் எவ்விதம் நம்மை வழிநடத்துகிறார் என்பது குறித்தும் சுருக்கமாக பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

## 1. தேவ வழிநடத்துதலின் அவசியம்
## The 'MUST' of God's Guidance

வாழ்க்கையின் பலவிதமான சூழ்நிலைகளில் நாம் (குடும்ப சூழ்நிலை, பொருளாதார சூழ்நிலை, ஊழிய சூழ்நிலை) தடுமாறும்போது வழி தெரியாமல், செய்வது இன்னதென்று அறியாமல் கவலைப்படுகிறோம். ஆகவேதான் தீர்க்கதரிசி, 'மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன் நடைகளை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்' என்று கூறுகிறார் (எரே.10:23). இத்தகைய தடுமாற்றம் நிறைந்த வாழ்வில் தேவனுடைய வழிநடத்துதல் நமக்கு மிகவும் அவசியம். இல்லையேல் நாம் வழிதப்பி, தேவத் திட்டத்தை விட்டு விலகி சென்றுவிடுவோம் (ஏசாயா 53:6). நம்முடைய கர்த்தர் நல்ல மேய்ப்பனாக நம்மை வழிநடத்துகிறவராய் இருக்கிறார் (சங்.23:3). தாவீதைப் போல, "கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதித்து, செவ்வையான பாதையிலே என்னை நடத்தும்" (சங்.27:11) என்று நாமும் ஜெபிப்போமானால் கர்த்தர் நம்மையும் நடத்துவார்.

## 2. தேவ வழிநடத்துதலின் விதம்
## The 'MANNER' of God's Guidance

**நித்தமும் நடத்துவார்:**

**"கர்த்தர் நித்தமும் உன்னை நடத்துவார்" (ஏசாயா 58:11).**

நம்முடைய கர்த்தர் நம்மை வாழ்நாள் முழுவதும் வழிநடத்த வாக்குப்பண்ணியிருக்கிறார். அவர் நித்தமும், தினமும் நடத்துவார் (ஏசாயா 58:11). இஸ்ரவேல் ஜனங்களை 40 ஆண்டுகள் இரவும் பகலும் அவர்கள்

முன் சென்று வழி நடத்தினார் என்று வேதம் கூறுகிறது (சங்.78:14; நெகே.9:12,19; யாத்.13:21). இந்த தேவன் சதாகாலங்களிலும் நம்முடைய தேவன்; மரணபரியந்தம் நம்மை நடத்துவார் என்றும் முடிவு பரியந்தம் நடத்துவார் என்றும் சங்கீதக்காரன் கூறுகிறார் (சங்.48:14;73:24). ஆம் பிரியமானவர்களே, தேவன் ஒவ்வொரு நாளும் உங்கள் தேவைகளை சந்தித்து, வறட்சி வந்தாலும் உங்களை நடத்தி உங்களை திருப்தியாக்குவார். நீங்கள் நீர்ப்பாய்ச்சலான தோட்டத்தைப் போல இருப்பீர்கள்!

**நேர்வழியில் நடத்துவார்:**

**"என்னை நேர்வழியாய் நடத்தி வந்த தேவனாயிருக்கிற கர்த்தரை ஸ்தோத்திரித்தேன்" (ஆதி. 24:48).**

ஆபிரகாம் தன் குமாரனாகிய ஈசாக்குக்கு பெண் தேடுவதற்காக தன்னுடைய ஊழியக்காரன் எலியேசரை அனுப்பியபோது ஆண்டவர் அவரை நேர்வழியாய் நடத்தி, ரெபேக்காளை தெரிந்தெடுக்க கிருபை செய்தார். ஆபிரகாமின் மனவிருப்பங்களையும் நிறைவேற்றினார். எலியேசரின் ஜெபத்தையும் கேட்டு ஆச்சரியமாய் காரியங்களை வாய்க்கப்பண்ணினார் (ஆதி.24:12,48,56). நாமும் நமக்காகவும் நம் பிள்ளைகளுக்காகவும் தேவ வழிநடத்துதலை கேட்டு ஜெபிக்கும்போது கர்த்தர் நிச்சயம் நம்மையும் நேர்வழியாய் நடத்தி, காரியங்களை வாய்க்கப்பண்ணுவார்.

**நித்திய வழியில் நடத்துவார்:**

**'நித்திய வழியிலே என்னை நடத்தும்' (சங். 139:24).**

மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு. அதின் முடிவோ மரணவழிகள் என்று வேதம் கூறுகிறது (நீதி.14:12; 16:25). தேவ வழிநடத்துதலை நாடாமல் நம்முடைய சுய வழியில் சென்றால் முடிவு விபரீதமாக இருக்கும். ஆகவே நாம் நம்முடைய சுயபுத்தியின்மேல் சாயாமல், கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து அவருடைய வழிநடத்துதலை நாடுவோம். அவர் நம்மை நீதியின் பாதைகளில் செவ்வையான பாதையில், சத்தியத்தின் வழியில், நித்திய வழியில் பத்திரமாய் நடத்துவார் என்று வேத வசனங்கள் கூறுகிறது (நீதி.3:5,6; சங்கீதம் 23:3; 25:5; 78:53; 107:7).

## 3. தேவ வழிநடத்துதலின் முறைகள்
## The 'METHODS' of God's Guidance

**1. கர்த்தருடைய வார்த்தை (Scriptures):**

தேவன் தம்முடைய வார்த்தையைக் கொண்டு நம்மை வழி நடத்துகிறார். கர்த்தருடைய வசனமே நம்முடைய கால்களுக்கு தீபமும் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது (சங்.119:105). வேதம்தான் இந்த பூமிக்குரிய நம்முடைய வாழ்க்கை பயணத்தில் நமக்கு வழிகாட்டியாகவும், திசை காட்டியாகவும் இருக்கிறது. நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும் இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று கர்த்தர் தம்முடைய வார்த்தையின் மூலம் உங்களோடு பேசி வழி நடத்துவார் (ஏசாயா 30:21). ஆகவே இந்த ஆண்டு அனுதினமும் தேவனுடைய வார்த்தையை வாசித்து, தேவனுடைய சத்தத்தை கேட்க பழகுவோம்! என்ஆடுகள் என் சத்தத்தை அறிந்திருக்கிறது, செவிக்கொடுக்கிறது, எனக்குப் பின் செல்லுகிறது என்று இயேசு கூறினார் (யோவான் 10:3,4,27). அவருடைய வார்த்தையை இருதயத்தில் வைத்து அவைகளின்படி நடக்கிறவர்களின் நடைகள் ஒருபோதும் பிசகுவதில்லை (சங். 37:31).

**2. பரிசுத்த ஆவியானவர் (Spirit of God):**

தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியானவரைக் கொண்டு நம்மை வழி நடத்துகிறார். 'உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக' என்று தாவீது ஜெபிக்கிறார் (சங்.143:10). இஸ்ரவேல் ஜனங்களுக்கு தேவன் தம்முடைய நல் ஆவியைக் கட்டளையிட்டு அவர்களை நடத்தி வந்தார் (நெகே.9:19,20). சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார் என்று இயேசு கூறினார் (யோவான் 16:13;14:26). பரிசுத்த ஆவியானவர் ஊழியத்தின் பாதையிலே அப்போஸ்தலர்களை வழி நடத்தினார் (அப்.10:19,20;13:2;16:7). சரியான தீர்மானங்களை எடுப்பதற்கு உதவிச் செய்தார் (அப்.15:29). நமக்கும் அப்படியே செய்வார்! ஆவியானவர் ஒருபோதும் வசனத்திற்கு மாறாக வழி நடத்தமாட்டார். சிலர் இன்று ஆவியானவர் பேசினார் என்று கூறி தெளிவான வேத ஆலோசனைகளுக்கு விரோதமாக செயல்படுகின்றனர். இது தவறானது, ஆபத்தானது. மேலும் சொப்பனத்தின் மூலமோ, தீர்க்கதரிசனத்தின் மூலமோ உங்களிடம் யாராகிலும் பேசினால், வேதவசனத்திற்கு ஒத்திருக்கிறதா? என்று சோதித்துப்பார்க்க வேண்டும் (1 யோவான் 4:1). இல்லாவிடில், தவறாக நடத்தப்பட அதிக வாய்ப்புகள் உண்டு. கவனம்!

**3. பரிசுத்தவான்களின் ஆலோசனை (Saints' Counsel):**

பரிசுத்தவான்களின் ஞானமுள்ள ஆலோசனைகளைக் கொண்டும் தேவன் நம்மை வழி நடத்துகிறார். ஆலோசனையில்லாத இடங்களில் ஜனங்கள் விழுந்து போவார்கள்; அநேக ஆலோசனைக்காரர் உண்டானால் சுகம் உண்டாகும் (நீதி.11:14). ஆலோசனைக்குச் செவி கொடுக்கிறவனோ ஞானமுள்ளவன் (நீதி.12:15). ஆலோசனையைக் கேட்கிறவர்களிடத்தில் ஞானமுண்டு (நீதி.13:10). ஆலோசனைக்காரர் அநேகர் இருந்தால் எண்ணங்கள் உறுதிப்படும் (நீதி.15:22; 20:18) ஆலோசனைக்காரர் அநேகரால் ஜெயங்கிடைக்கும் (நீதி.24:6) என்றெல்லாம் வேதம் நமக்கு கூறுகிறது. ஆகவே ஒரு காரியத்தை செய்வதற்கு வேத வசன வெளிச்சத்தோடுக்கூட பெற்றோர்கள், ஆவிக்குரிய அனுபவமுள்ள போதகர்கள், மூத்த தேவப்பிள்ளைகளின் ஆலோசனைகளை கேட்பது வாழ்க்கையில் சரியான வழிநடத்துதலை பெறவும், நல்ல முடிவுகளை எடுக்க மிகவும் உதவிடும். ஜனங்களை பாரமின்றி நியாயம் விசாரித்து வழிநடத்த எத்திரோவின் ஆலோசனை மோசேவுக்கு மிகவும் உதவியாயிருந்தது (யாத்.18:14-20). நாத்தானின் ஆலோசனை தாவீதுக்கு சரியான நேரத்தில் கிடைத்தபடியால் சாலொமோனை தனக்கு பின் சிங்காசனத்தின் மேல் அமர்த்த முடிந்தது (1 இராஜா.1:11-12).

**4. சூழ்நிலைகள் (Situations):**

தேவன் நம்முடைய வாழ்க்கையில் ஏற்படும் சூழ்நிலைகளைக் கொண்டும் சில சமயங்களில் நம்மை வழி நடத்துகிறார். அப்போஸ்தலனாகிய பவுல் ஆசியாவின் சில பகுதிகளுக்கு சென்று ஊழியம் செய்ய தீர்மானித்திருக்கும்போது, தேவன் அங்கு செல்வதற்கான வாசல்களை அடைத்தார் (அப்.16:6-7). பவுலைக் கொண்டு ஐரோப்பா கண்டத்திற்கு சுவிசேஷம் செல்ல வேண்டும், சபை ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று தேவன் திட்டம் வைத்திருந்தார் (அப்.16:9-40). தேவன் நாம் அவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதற்கு சில வாசல்களை அடைக்கிறார். சில வாசல்களை திறக்கிறார் (1கொரி.16:9).மேலும் சில நேரங்களில் நாம் கடினப்பட்டு தவறான வழியில் செல்லும்போது, சூழ்நிலைகள் மூலம் நம்மோடு

பேசி சரிப்படுத்துகிறார். பிலேயாமை கழுதையைக் கொண்டு எச்சரித்தது இதற்கு உதாரணமாக இருக்கிறது (எண். 22:25-32).

**5. ஜெபம் (Supplication):**

தேவனோடு நாம் ஜெபத்தில் நெருங்கிய உறவு வைத்திருக்கும்போது அவர் நம்மை அற்புதமாக நடத்துவார். தாவீது கர்த்தரை நோக்கி, "கர்த்தாவே, உம்முடைய வழிகளை எனக்கு தெரிவியும், உம்முடைய பாதைகளை எனக்குப் போதித்தருளும்" (சங்கீதம் 25:4,5) என்றும், "கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதித்து, செவ்வையான பாதையில் என்னை நடத்தும்" (சங்கீதம் 27:11) என்றும் ஜெபித்தார். மேலும் தாவீது ஒவ்வொரு இக்கட்டான நேரத்திலும் கர்த்தரிடத்தில் ஜெபித்து விசாரித்து காரியங்களை செய்யும் பழக்கம் உடையவராயிருந்தார். கர்த்தர் அற்புதமாக வெற்றியைத் தந்து நடத்தினார் (1 சாமு.23:1-4,10-12; 30:8,9; 2 சாமு.2:1-2; 5:17-21,22-25; 21:1). எலியேசர் ஜெபித்தபோது கர்த்தர் அழகாக சரியான பாதையில் நடத்தினார் என வாசிக்கிறோம் (ஆதி.24:12-14).

ஆம், பிரியமானவர்களே, நம்முடைய தேவன் நம்மை இந்த வாழ்க்கைப் பயணத்தில் அற்புதமாக வழி நடத்த ஆயத்தமாயிருக்கிறார். நீங்கள் உங்கள் வழிகளை அவருக்கு ஒப்புவித்து அவர்மேல் நம்பிக்கையாயிருங்கள். அவர் உங்களுக்குப் போதித்து, நீங்கள் நடக்க வேண்டிய வழியை உங்களுக்குக் காட்டுவார் (சங்.37:5; 32:8; நீதி.3:5,6). நீங்கள் வருட இறுதியில் உங்களை அதிசயமாய் நடத்தி வந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள்! ஆமென்!

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மண்டல தலைமைப் போதகர், திருச்சி தெற்கு மண்டலம்.

---

தாங்கள் பரிபூரண ஜீவன் பத்திரிக்கை மூலமாக ஆசீர்வதிக்கப்பட்டிருந்தால் உங்கள் சாட்சிகளை வாட்ஸ்அப் மூலமாகவோ, தபால் மூலமாகவோ தெரிவிக்கலாம். மேலும் ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பயனுள்ள செய்திகள், துணுக்குகள் ஆகியவற்றையும் அனுப்பலாம்.

**நீங்கள் அனுப்ப வேண்டிய முகவரி**

**Rev. JERRY DANIEL**
303, C Block, Roshan Residency,
6, VOC Road, Cantonment, TRICHY - 620 001
Cell : 94434 15484

## ஜெபியுங்கள் ! தாங்குங்கள் !!

பரிபூரண ஜீவன் பத்திரிக்கை ஊழியத்தின் மூலம் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பீர்கள், எனவே உங்கள் சாட்சிகளை எழுதி அனுப்புங்கள். பத்திரிக்கை ஊழியத்தின் தேவையை சந்திக்க ஒரு வெளியீட்டிற்கு ஆகும் செலவு ரூ.**1,25,000.** உதாரத்துவமாய் கொடுத்து உதவுங்கள் அல்லது உங்களால் இயன்ற அளவு கொடுத்து பத்திரிக்கை ஊழியத்தை தாங்குங்கள். இவை எல்லாவற்றிக்கும் மேலாக தொடர்ந்து இந்த ஊழியத்திற்காக ஜெபியுங்கள் நன்றி.



# 2023-ஐ இலக்குடன் தொடங்குங்கள் இலக்கை நோக்கித் தொடருங்கள்

பரிசுத்த பவுல், ''நாம் நிச்சயமில்லாதவர்களாக ஓடக்கூடாது" (1 கொரி.9:26) என்றும், "இலக்கை நோக்கித் தொடர வேண்டும்'' எனவும் (பிலி. 3:13,14). நமக்கு அறிவுறுத்துகிறார். நாம் இந்த புத்தாண்டில் நிச்சயமான இலக்குகளைக் கொண்டவர்களாக இருக்க வேண்டும். நம் வாழ்வின் அனைத்து நிலைகளிலும் தேறுகிறது அனைவருக்கும் பிரத்தியட்சமாய் காணப்படுவது அவசியம் (1 தீமோ. 4:15). இந்த 2023-ம் ஆண்டில் நீங்கள் நிர்ணயித்துக் கொள்வதற்கும், அடைவதற்கும் ஏற்ற சில பயனுள்ள இலக்குகளைக் குறித்து உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

## 5 அத்தியாவசியமான இலக்குகள் : 5 Fs

### விசுவாசம் (FAITH)

- நான் அனுதினமும் குறைந்தது ஒரு மணி நேரம் தேவனோடு கூட செலவிடுவேன்.
- இந்த வருடத்தில் ஒரு முறையாவது வேதாகமத்தை முழுமையாக வாசித்து முடிப்பேன்.
- அனுதினமும் ஒரு வேத வசனத்தை மனனம் செய்வேன்.
- மாதம் ஒருமுறை ஒரே ஒரு ஆவிக்குரிய புத்தகத்தையாவது வாசிப்பேன்.
- ஆலயத்திற்கு தவறாமல் செல்வேன்; மட்டுமின்றி சரியான நேரத்திற்கும் செல்வேன்.
- சபையில் நடைபெறும் பற்பல ஊழியங்களில் ஏதாவது ஒன்றிலாகிலும் பங்கெடுத்து, உண்மையாய் ஊழியம் செய்வேன்.
- ஆவியின் கனிகள் என்னில் வளர்ந்து பெருக பிரயாசம் எடுப்பேன்.
- ஒரு நாளில் அதிகபட்சமாக 30 நிமிடங்களுக்கு மேல் சமூக வலைத்தளங்களில் நேரத்தை செலவிட மாட்டேன்.

### 2. குடும்பம் (FAMILY)

- நான் குடும்ப ஜெபத்தை கடைப்பிடிப்பேன்.
- எனது குடும்ப உறவுகளை வலுப்படுத்துவேன் (குடும்பமாக வெளியே செல்லுதல், பேசி மகிழ்தல்...).
- ஒரு நாளில் ஒரு முறையாவது எனது குடும்பத்தினருடன் இணைந்து உணவருந்துவேன்.
- எனது குடும்பத்தை சேர்ந்தவர்களை கிறிஸ்துவுக்கென்று ஆதாயம் செய்வேன்.
- என் குடும்பத்தினர் மீது எனக்குள்ள அன்பை செயல்களினாலே வெளிப்படுத்துவேன்.
- மன்னிப்பை அனுதினமும் என் வாழ்வில் அப்பியாசப்படுத்துவேன்.

### 3. பொருளாதாரம் (FINANCE)

- நான் தசமபாகத்தை உண்மையாக செலுத்துவேன்.
- சோம்பேறியாக இருக்காமல் கடினமாக உழைப்பேன்.
- கடன் வாங்க மாட்டேன்; வாங்கிய கடன்களை விரைவில் திருப்பி செலுத்துவேன்.
- எனது வருமானத்திற்குள் திருப்தியாக வாழுவேன்.
- ஏழை, எளியவர்களுக்கு உதவி செய்வேன்.
- வருமானத்தில் ஒரு சிறு பகுதியை முறையாக சேமித்து வைப்பேன்.
- உற்சாக மனதுடனே கர்த்தருக்கு காணிக்கை செலுத்துவேன்.

### 4. ஆரோக்கியம் / உடல் நலம் (FITNESS)

- எனது உடல் பரிசுத்த ஆவியானவருடைய ஆலயம் என்பதை உணர்ந்து செயல்படுவேன்.
- தினமும் பத்திலிருந்து முப்பது நிமிடங்கள் வரை நடைபயிற்சி/ உடற்பயிற்சி மேற்கொள்வேன்.
- நிறைய தண்ணீர் அருந்துவேன்.
- ஆரோக்கியமற்ற, துரித உணவுகளை (Fast Food) உண்ண மாட்டேன்.
- எனது உடலின் சர்க்கரை, கொழுப்பு, இரத்த அழுத்தம் இவற்றை கட்டுப்பாட்டில் வைத்திருக்க ஆவண செய்வேன்.
- எனது அதிகப்படியான உடல் எடையைக் குறைத்து, என் உயரத்திற்கும் வயதிற்கும் ஏற்ற உடல் எடையைப் பெற அயராது முயற்சிப்பேன்.

### 5. நட்பு / உறவுகள் (FRIENDSHIP)

- நான் இவ்வாண்டில் புதிதாக பத்து நண்பர்களையாவது சம்பாதிப்பேன்.
- தினமும் குறைந்தபட்சம் ஒருவரின் சந்தோஷத்திற்கு நான் காரணமாக இருப்பேன்.
- பிறரின் தகுதியான நற்செயல்களை பாராட்டுவேன்; உற்சாகப்படுத்துவேன்.
- வம்பு பேசமாட்டேன்; புறங்கூறமாட்டேன்; உள்ளத்தில் பகையை மறைத்து வைக்க மாட்டேன்.
- என் நாவை அடக்கி, வார்த்தைகளை கவனமாகக் கையாளுவேன்.
- இந்த ஆண்டு இரண்டு பேரையாவது இயேசுவுக்காக ஆதாயம் செய்து ஞானஸ்நானத்திற்குள் வழிநடத்துவேன்.

**இந்த இலக்குகளை நீங்கள் அடைய கர்த்தர் தாமே உங்களை பெலப்படுத்துவாராக; உங்களை ஆசீர்வதிப்பாராக**

ஆசிரியர்



# இயேசு கிறிஸ்துவின் வருகையும் உலக முடிவும் அதிசீக்கிரம்

Rev. P.S. ராஜமணி
இயக்குநர் - அகில இந்திய விஷன் 2020

**பாகம் - 1** ...தொடர்ச்சி

## நிறைவேறிவிட்ட தீர்க்கதரிசனங்கள்

கடைசி நாட்களில் நடக்கும் என்று சொல்லப்பட்டுள்ள தீர்க்கதரிசனங்களில் பல நிறைவேறிவிட்டன. சில நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. சில நிறைவேற வேண்டி இருக்கின்றன. ஏற்கெனவே நிறைவேறிவிட்ட தீர்க்கதரிசனங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

**1. எருசலேம் தேவாலயம் இடிக்கப்பட்டது:** (மத். 24:12; லூக்கா 21:5,6)

எருசலேம் தேவாலயம் இடிக்கப்படும் என்பதை இயேசு கடைசி கால நிகழ்ச்சிகளுடன் இணைத்துக் கூறாவிட்டாலும், கடைசி கால சம்பவங்களை அவர் பட்டியலிட்டு அதற்கு முன்பதாக இதைக் குறிப்பிட்டார். அவர் தீர்க்கதரிசனமாய் உரைத்து சுமார் 40 ஆண்டுகளுக்குள் இது நிறைவேறியது. கி.பி.70ல் எருசலேம் தேவாலயம் இடிக்கப்பட்டது. அதற்குப் பின்பு இன்றுவரை ஆலயம் கட்டப்படவில்லை.

சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் எருசலேம் 46 தடவை முற்றுகையிடப்பட்டது. 13 தடவை அரைகுறையாய் இடிக்கப்பட்டது. 17 தடவை முற்றிலும் இடிக்கப்பட்டது.

எருசலேம் தேவாலயம் சாலொமோன் காலத்தில் கி.மு.970ல் கட்டப்பட்டது. பாபிலோன் பேரரசன் நேபுகாத்நேச்சார் கி.மு.586ல் இதை அழித்தான். செருபாபேல் காலத்தில் மறுபடியும் கட்டப்பட்டு கி.மு.515ல் இரண்டாம் தேவாலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

கி.மு.169ல் சீரிய அரசனான அந்தியோகஸ் எப்பிபனஸ் இந்த தேவாலயத்தை அசுத்தப்படுத்தினான். பன்றிகளைப் பலியிட்டான். ஆலயப் பகுதிக்குள் சிலைகளைக் கொண்டுவந்து நாட்டினான். பின்பு வைராக்கியமுள்ள யூதர்கள் யூதாஸ் மக்கபேயர் தலைமையில் எழும்பி தேவாலயத்தை சுத்திகரித்தனர். ஏரோது இந்த தேவாலயத்தை செப்பனிட 46 வருடங்கள் எடுத்தான் (யோவான் 2:20).

கி.மு.63ல் இஸ்ரேல் நாடு ரோமருடைய ஆட்சியின்கீழ் வந்தது. கி.பி.66-70 ஆண்டுகளில் யூதர்கள் ரோமருடைய ஆட்சியை எதிர்த்து கலகம் பண்ணினார்கள்.

ரோமப் படைத்தளபதி தீத்து தன் சேனையுடன் வந்து எருசலேமை முற்றுகையிட்டான். ரோம ராணுவத்தினர் பட்டணத்தில் கோட்டைச் சுவரை நெருங்கியபோது யூதர்கள் மேலிருந்து கொதித்த எண்ணெயை ஊற்றி ஏராளமான ரோம வீரர்களைக் கொன்றனர். கோபம் கொண்ட ரோம சேனை கோட்டைக்கு வெளியே இருந்த யூதர்களை சிறைப்பிடித்து சிலுவையில் அறைந்தனர். 4 மாதங்கள் எருசலேம் முற்றுகையிடப்பட்டிருந்தது. கோட்டைக்கு உள்ளே இருந்தவர்கள் இக்கட்டை அனுபவித்தனர். உணவில்லை, மரித்தவர்களை அடக்கம் பண்ண முடியாததால் தெருக்களில் பிணங்கள் அழுகி நாற்றமெடுத்துக் கொண்டிருந்தன. பட்டணத்திற்குள் தொற்றுவியாதி பரவி அநேகர் மாண்டனர். பசி தாங்க முடியாதவர்கள் மரித்துப்போன தங்கள் பிள்ளைகளின் பிணங்களை சாப்பிட்ட பரிதாப நிலை காணப்பட்டது.

கடைசியில் ரோமர் எருசலேம் கோட்டைக் கதவுகளை உடைத்து உள்ளே புகுந்தனர். மக்களைக் கொன்று குவித்தனர். ஆயிரக்கணக்கான சிறுபிள்ளைகளை கோட்டைச் சுவரிலிருந்து தூக்கி எறிந்து கொன்றனர். எல்லா இடங்களையும் தீவைத்துக் கொளுத்தினர்.

தேவாலயத்தை தீயிட்டு கொளுத்தினர். அதில் பயன்படுத்தப்பட்ட பொன், வெள்ளியின் மதிப்பு சுமார் 8 இலட்சம் கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த பொன் உருகி ஆலய கட்டிட கற்களுக்குள் ஓடினபடியால் இந்தப் பொன்னை சேகரிக்க தேவாலய கற்கள் ஒன்றின்மேல் ஒன்று இராதபடி எல்லாம் இடிக்கப்பட்டது.

சிலுவையில் அறைந்தும், பட்டயத்தால் வெட்டியும் மாண்டு போன யூதர்களின் எண்ணிக்கை சுமார் 10 இலட்சம். சுமார் 20 இலட்சம் பேர் சங்கிலிகளால் கட்டப்பட்டு மிருகங்களைப் போல இழுத்துச் செல்லப்பட்டனர்.

இதற்குப் பின்பும் ஆங்காங்கே இஸ்ரவேல் நாட்டிலே கலகம் உண்டானது. 966 யூதர்கள் குடும்பமாக சுமார் 1500 அடி உயரமுள்ள ஓர் சிறு குன்றின் உயரத்திற்குச் சென்று பதுங்கி இருந்தனர். ரோம சேனை இந்த குன்றை சுற்றி முற்றுகையிட்டனர். சுமார் இரண்டு வருடம் இந்த முற்றுகை நீடித்தது. மேலே இருந்த 966 யூதர்களுக்கு இனி பிழைக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டது. உணவு இல்லை, தண்ணீர் இல்லை.

ரோமருக்கு சரணடையவும் அவர்கள் விரும்பவில்லை. எனவே புருஷர்கள் தங்கள் மனைவிகளையும், தங்கள் பிள்ளைகளையும் தாங்களே கொன்றனர். பின்பு தங்களைத் தாங்களே கொன்றனர். கி.பி. 73ல் இது நடந்தது.

ரோமப் பேரரசனான ஹாட்ரியனின் ஆட்சியின் போது கி.பி. 132ல் சைமன் பார்கோச்பா (Simon Bar Kochba) என்ற யூதத் தலைவன் மறுபடியும் ரோமருக்கு விரோதமாக கலகம்பண்ணி எருசலேமைப் பிடித்தான். 3 வருடங்கள் இவன் ஆட்சி செய்தான். கி.பி. 135ல் மறுபடியும் ரோம சேனை அதிக கோபத்துடன் வந்து எருசலேம் பட்டணத்தை முற்றிலும் அழித்துப் போட்டனர். அத்துடன் பட்டணம் முழுவதையும் உழுது அதில் சீயஸ் (Zeus) தேவதைக்கு ஒரு கோவில் கட்டி ரோமர் குடியிருப்புப் பட்டணமாக்கி அதற்கு அலியா கேப்பிட்டலினா (Aelia Capitolina) என்று பெயரிட்டனர். எந்த யூதரும் அதற்குள் அனுமதிக்கப்படவில்லை.

மூன்றாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கிறிஸ்தவனாய் மாறின ரோமப் பேரரசன் கான்ஸ்டான்டின் எருசலேமிலிருந்த தேவதைகளின் கோவில்களை அகற்றி கிறிஸ்தவ ஆலயங்களைக் கட்டினான். கிறிஸ்தவர்களின் புனிதப் பட்டணமாக எருசலேம் மாறிற்று. ஏராளமானவர்கள் புனித யாத்திரை வர ஆரம்பித்தனர்.

- கி.பி.362ல் ரோமப் பேரரசன் ஜூலியஸ் யூதர்கள் எருசலேமில் குடியேற அனுமதித்தான்.
- கி.பி.614ல் யூதர்களுடைய உதவியுடன் பெர்சியர் எருசலேமைப் பிடித்தனர். சுமார் 3 ஆண்டுகள் யூதர் ஆட்சி செய்தனர்.
- கி.பி.629ல் ஹெராக்ளியஸ் என்ற பேரரசன் பெர்சியரிடமிருந்து எருசலேமைப் பிடித்து ஆட்சி செய்தான்.
- கி.பி.638ல் கலிப் ஓமர் அல்-கட்டாப் (CALIPH OMAR AL-KHATTAB) பட்டணத்தைப் பிடித்து 70 யூதக் குடும்பங்களை எருசலேம் தேவாலயத்தின் மேற்கு சுவர் அருகே குடியிருக்க அனுமதித்தான்.
- கி.பி. 692ல் தற்போது இருக்கும் முஸ்லீம் மசூதி (DOME OF THE ROCK) கட்டப்பட்டது.
- கி.பி. 750 - கலிபா அப்பாசிட் ஆட்சி
- கி.பி. 1099 - கிறிஸ்தவ சேனை (CRUSODERS) எருசலேமைப் பிடித்து யூத சமூகத்தை அழித்தனர்.
- 1187ல்- குர்திஸ் இனத்தைச் சார்ந்து சலாடின் என்ற எகிப்து மற்றும் சிரியாவின் சுல்தான் எருசலேமைப் பிடித்தான்.
- 1259ல் - டாடர் என்ற கலகக்காரன் எருசலேமைப் பிடித்தான்.
- 1260ல் - மாம்லுக் என்ற இனமக்கள் எருசலேமைப் பிடித்தனர்.
- 1267ல் - நமனிடஸ் (NAHMANIDES) என்பவனும் அவனுடைய சீடர்களும், ஸ்பெயின் தேசத்திலிருந்து வந்து யூதக் குடியிருப்பிற்கான வழிகளை ஏற்படுத்தினர்.
- 1488-ஒபதியா என்ற யூதகுரு பெர்டினாரோ என்ற இடத்திலிருந்து வந்து எருசலேமில் குடியேறினர்.
- 1517ல்-துருக்கியர் எருசலேமைப் பிடித்து சமார் 400 ஆண்டு காலம் எருசலேமை ஆண்டனர் (இடையில் சிறிது காலம் எகிப்தியர் ஆண்டனர்).
- 1538-சுல்தான் சுலைமான் பழைய எருசலேம் பட்டணத்தைச் சுற்றிலும் புதிய மதிலைக் கட்டினான். இந்த சுவர்தான் இன்று வரை இருக்கின்றது.
- 1917 - பிரிட்டிஷ் ராணுவம் எருசலேமை பிடித்தது.
- 1948 - இஸ்ரவேல் சுதந்தரம் பெற்றது.
- 1967 - பிரிக்கப்பட்ட எருசலேம் ஒன்றாய் இணைக்கப்பட்டது.

தொடரும்...



# தேவனுடைய இராஜ்யம்


## திருமதி. கெட்சியாள் மோகன்

President, Women's Fellowship Department


கிறிஸ்துவிற்குள் பிரியமானவர்களே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலே புது வருட வாழ்த்துக்களை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்புது வருடம், யூபிலியின் (Year of Jubilee) வருடமாக இருக்க வாழ்த்துகிறேன். யூபிலி ஆண்டென்பது விடுதலையின் வருடமாகவும் அநுக்கிரக வருடமாகவும் கருதப்படுகிறது. (Year of Favour). “அது யூபிலி வருஷம். அது உங்களுக்கு பரிசுத்தமாயிருக்க வேண்டும்”. (For it is a Jubilee and is to be holy for you. Lev.25:12) (லேவி.25:21) என்று ஆண்டவர் இஸ்ரவேலர்களுக்குக் கட்டளை யிடுகிறார். Consecrate that year என்று லேவி.25:10-ல் வாசிக்கிறோம். இதற்கு “அர்ப்பணம் செய்” என்ற ஒரு பொருளும் உண்டு. எனவே இப்புதிய ஆண்டில் தேவனுடைய இராஜ்ஜியத்தை முதலாவது தேட நம்மை அர்ப்பணிப்போமாக.

### தேவனுடைய இராஜ்யம்:

தேவனுடைய இராஜ்யம் என்பது “பெலத்திலே உண்டாயிருக்கிறது” என்று 1 கொரி.5:20-ல் வாசிக்கிறோம். தேவனுடைய இராஜ்யம் நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது (ரோமர் 14:17). தேவனுடைய இராஜ்யம் பேச்சிலே அல்ல என்றும் அது புசிப்பும் குடிப்பும் அல்ல என்றும் மேற்கூறிய வசனங்களிலிருந்து அறிகிறோம். “தேவனுடைய இராஜ்ஜியம்” எப்போது வருமென்று காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் அது நமக்குள் இருக்கிறது என்று இயேசு கூறியிருக்கிறார் (லூக்கா 17:21).

என் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல (யோவான் 18:36) என்று இயேசு கூறுகிறார். இந்த தேவனுடைய ராஜ்யத்தை நாம் முதலாவது தேடும்போது. நமக்குத் தேவையான அனைத்தும் சேர்த்துத் தரப்படும் என்று மத்தேயு 6:33-ல் வாசிக்கிறோம். இந்த தேவ ராஜ்யத்தை சுதந்தரிக்கும்படி அல்லது அதன் அங்கத்தினராக மாறும்படி நாம் என்ன செய்ய வேண்டுமென்று பார்ப்போம்.

### 1. தேவ இராஜ்யத்தில் பிரவேசிப்பது

“ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்'' என்று இயேசுவானவர் நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயனிடம் கூறினார் (யோவான் 3:5). ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய இராஜ்யத்தைக் காணமாட்டான் என்று இயேசு மிகவும் அழுத்தந் திருத்தமாக இவைகளைக் கூறியிருக்கிறார். நாம் நம்முடைய பாவப் பழக்க வழக்கங்களையும், அக்கிரம வழிகளையும் விட்டு மனந்திரும்பி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நம்முடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது, தேவனுடைய இராஜ்யத்தைக் காணும் பாக்கியத்தைப் பெறுகிறோம். பின்பு திருவசனத்தினால் கழுவப்பட்டு, பாவமன்னிப்பிற்கென்று ஞானஸ்நானம் பெற்று, ஆவியானவருடைய அபிஷேகத்தைக் பெற்றுக் கொள்ளும்போது அந்த இராஜ்யத்திற்குள் நாம் பிரவேசிக்கிறோம். அது நமக்குள் கடந்து விடுகிறது. இதுவரை இந்த அனுபவங்களுக்குள் கடந்து

வராமலிருப்பீர்களென்றால், இப்புதிய ஆண்டில் ஆண்டவர் உங்களை கரம் நீட்டி அழைக்கிறார்.அவரை ஏற்றுக்கொண்டு தேவ இராஜ்யத்தின் பிள்ளைகளாவீர் களாக!. இவ்வனுபவத்தைப் பெற்றும் பின்மாற்றத்திலும், குளிர்ந்துபோன நிலையிலும் இருப்பீர்களானால், தேவன் உங்கள் மீது அன்பாய் ஆதி நிலைக்கு கடந்துவரும்படி அழைக்கிறார். பிரியமானவர்களே தேவ இராஜ்யத்திற்குள் கடந்து வந்து, அதன் சகல ஆசீர்வாதங்களையும் அனுபவிக்க தேவன் உங்களுக்கு உதவி செய்வாராக.

### 2. தேவ ராஜ்யம் எங்கு இருக்கிறது

லூக்கா 17:20,27-ல் தேவராஜ்யம் நமக்குள் இருப்பதாக இயேசு கூறுகிறார். தேவராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கான தகுதிகளை நாம் பூர்த்தி செய்யும்போது தேவராஜ்யம் நமக்குள் வந்து விடுகிறது. நாம் மறுரூபமடைகிறோம். நம் வாழ்வு மாற்றப்படுகிறது. நம் சிந்தனை, பார்வை, அனைத்தும் தேவனுக்கேற்றதாக மாறிவிடுகிறது. நாம் இருக்குமிடம் பரலோகம் போல் மாறிவிடுகிறது. தேவராஜ்யம் பேச்சிலே அல்ல பெலத்திலே இருக்கிறது என்று நாம் பார்த்தோம். வெறும் வாய்ப் பேச்சு தரித்திரத்தை மட்டுமே கொண்டு வருகிறதாய் இருக்கிறது. தயவுள்ள போதகம் நம் வாயில் இருக்க வேண்டும். மற்றவர்களை உற்சாகப்படுத்தக்கூடிய, கட்டி எழுப்பக்கூடிய நல் வார்த்தைகளை நாம் பேசும்படி கல்விமானின் நாவை தேவன் நமக்குத் தந்தருளுவாராக, தேவ ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, நாம் உண்பதற்காக உயிர்வாழவில்லை, உயிர் வாழ்வதற்காகத் தான் உண்கிறோம். தேவராஜ்யம் நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது. தேவ ராஜ்யத்தில் நாம் இருக்கும்போது மிகுந்த சமாதானத்தோடும், சந்தோஷத்தோடும் இருப்போம். இந்த சந்தோஷம் சூழ்நிலைகளால் நமக்கு வருவதல்ல.சூழ்நிலைகள் எதிரிடையாக இருந்தாலும் வரும் சந்தோஷம். இது பரிசுத்த ஆவியானவர் அருளும் சந்தோஷம். இந்த இராஜ்யத்தில் நீதி வாசமாயிருக்கும். இங்கு அநியாயத்திற்கு இடமில்லை.

### 3. தேவ ராஜ்யத்தில் பெரியவர்கள்

மத்தேயு 18:3,4-ல் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல ஆகாவிட்டால் பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்கவும் முடியாது பெரியவனாக இருக்கவும் முடியாது என்று பார்க்கிறோம். சிறு பிள்ளைகளைப் போல தன்னைத் தாழ்த்துகிறவனே பரலோக இராஜ்யத்தில் பெரியவனாய் இருப்பான் என்று ஆண்டவர் கூறுகிறார்.‘‘கற்பனைகளைக் கைக்கொண்டு போதிக்கிறவனோ பரலோக இராஜ்யத்தில் பெரியவன் என்னப்படுவான்” என்று மத்தேயு 5;19-ல் வாசிக்கிறோம். கற்பனைகளை போதிப்பது பெரிதல்ல; அவைகளைக் கைக்கொள்ளவும் வேண்டும். கைக்கொள்ளுகிறவற்றைப் போதிக்கவும் வேண்டும். மிகக் கடினமான காரியமாக இருந்தாலும் இதைச் செய்யும்போது மாத்திரமே நாம் தேவ ராஜ்யத்தில் பெரியவர்களாக இருக்க முடியும். இவ்வுலகில் பெரியவர்களாக இருக்க நாம் எவ்வளவு முயற்சித்தாலும் ஒன்றும் நம்முடன் வராது. தேவராஜ்யத்தில் பெரியவர்களாகயிருப்பதே மேன்மையான சிலாக்கியமாகும்.

இத்தனை சிலாக்கியங்களும் பாக்கியங்களும் நிறைந்த தேவ ராஜ்யத்தை நாம் நம் வாழ்வில் பிரதானமாகக் கொண்டு, முதலில் அவரையும் அவருடைய இராஜ்யத்தையும் தேடுவோமானால், இந்த வருடத்திற்குத் தேவையான சகல ஆசீர்வாதங்களும், கிருபையும், இரக்கமும், தேவதயவும், தேவ நடத்துதலும் தூதர்களின் பாதுகாப்பும் நமக்கு சம்பூரணமாய் கிடைக்கும். தேவன் தானே இந்த 2023-ம் புது வருடத்தை உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும், உங்கள் சபைக்கும் ஆசீர்வாதமாய் மாற்றித் தருவாராக.



# தலைமைத்துவம்

## (Leadership)


**Dr. L. ஜெயபாலன்**

முன்னாள் முதல்வர், தமிழ்நாடு வேதாகம கல்லூரி


ஐரோப்பாவில் பயணம் செய்த குழுவினர், ஒரு சிறிய ஊருக்குச் சென்றனர். அந்த ஊரின் வாசலருகே முதியவர் ஒருவர் அமர்ந்திருந்தார். “இங்கு தலைவர்கள் பிறந்திருக்கிறார்களா?” என அந்த முதியவரிடம், பயணி வினவினார். “இங்கு தலைவர்கள் பிறந்ததாக எனக்குத் தெரியவில்லை,” என பதிலளித்தார் அந்த முதியவர்... ஆச்சர்யமடைந்த பயணி, ‘‘இங்கு ஒரு தலைவர் கூட பிறக்கவில்லையா?” என வினவ, மறுமொழியாக, “இங்கு சிசுக்கள் பிறந்தது எனக்குத் தெரியும்” என்றார் அந்த முதியவர். இது எவ்வளவு உண்மையிலும் உண்மை.

தலைவர்களாக பிறப்பதில்லை. ஆனால் அவர்கள் உருவாகின்றனர் என ஒருவர் கூறியுள்ளார். "Leaders are not born but they become". சிசுவாக பிறக்கிறவர்கள் பயிற்சியினாலும், முயற்சியினாலும் காலா காலத்தில் அவர்கள் தலைவர்களாக உருவாகின்றனர். அவர்கள் எந்திர மனிதர்களைப் போன்று உருவாக்குவது இல்லை. பெற்றோரின் முன் மாதிரி, போதனை, கல்வி, அனுபவம், தெய்வ நம்பிக்கை. விடாமுயற்சி, நேரத்தை சரிவர உபயோகித்தல், எல்லாவற்றிற்கும் மேலாக, கடவுளின் அருள் ஆகியவைகளின் மூலம் தலைவர்கள் உருவாகின்றனர்.

இயேசு கிறிஸ்து பிறக்கும் முன்னே, அவரைக்குறித்து ‘‘ஆளுகை (கர்த்தத்துவம்) அவர் தோளின் மேல் இருக்கும்” என ஏசாயா 9:6-ல் கூறப்பட்டுள்ளது. (The Government shall be upon His shoulders). இயேசு கிறிஸ்து இளவயது முதற்கொண்டே பரிசுத்தாவியானவரின் வல்லமையால் தேவ சித்தத்திற்கு தன்னை முற்றிலும் அர்ப்பணித்தார். “இயேசுவானவர் ஞானத்திலும் வளர்த்தியிலும், தேவ கிருபையிலும் மனுஷர் தயவிலும் அதிகதிகமாய் விருத்தியடைந்தார்” (லூக்கா 2:52).

ஆவிக்குரிய தலைவர்களுக்கு சிறந்த முன் மாதிரி இயேசுவே, அவரிடத்தில் காணப்பட்டவை :

**பரிசுத்தம் :** இது கடவுளின் பண்புகளில் ஒன்று

‘‘உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்” (லூக்கா 1:35). பரிசுத்தமுள்ள தேவன் நம்மை பரிசுத்தமாக்கும்படி தெரிந்து கொண்டார். இயேசு கிறிஸ்து வாழ்க்கையிலும் வார்த்தையிலும் பரிசுத்தமுள்ளவராக இருந்தார். இரட்சிக்கப்பட்டவர்களை, கடவுளின் வார்த்தை, ஆவியானவர் மூலம் புனிதப்படுத்துகிறார்.

**பரம அன்பு**

... இவ்வார்த்தை தெய்வீகமானதாகும் மற்றும் காதல், பாசம், நேசம் போன்ற வார்த்தைகளுக்கு மேலானதாகும். “தேவன் அன்பாகவே இருக்கிறார்” என பைபிள் கூறுகிறது. அந்த தெய்வீக அன்பு இயேசுவிடம் முழுமையாகக் காணப்பட்டது.

**மன உண்மை :**

இது இயேசுவின் உள்ளத்திலும், பேச்சிலும், செய்கையிலும் காணப்பட்டது. அவர் தான் சொன்னதைச் செய்தார். செய்ததைச் சொன்னார். "என்னிடத்தில் பாவம் உண்டென்று யாரால் சொல்ல முடியும்," என சவால் விட்டார். "எல்லாவற்றையும் நன்றாய் செய்தார்" என மக்கள் சாட்சி பகன்றனர் (மாற்கு 7:37).

**மனத்தாழ்மை :**

"நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கின்றேன்" (மத்தேயு 11:29). இந்த தாழ்மை ஒவ்வொரு தலைவருக்கும் இருக்கக்கூடிய பண்புகளில் ஒன்றாகும்.

**மன உருக்கம் :**

இயேசு கிறிஸ்து தமது மலைப் பிரசங்கத்தில் "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்றார். அது அவருடைய இரத்தத்தில் ஊறியிருந்தது. "திரளான ஜனங்களை கண்டபோதும்," மகனை இழந்த விதவையைக் கண்டபொழுதிலும், "இயேசு மனதுருகினார்". அவருடைய மன உருக்கம் ஒரு காரியத்தை செய்ய வைத்தது. அவனை உயிரோடு எழுப்பினார்.

**மனோ தைரியம் :**

தலைவர்களின் தவறுகளை இயேசு கண்டபொழுது கண் சாடையாய் இராமல் அதனை உடனே கண்டிக்கிறவராக இருந்தார். "மாயக்காரராகிய வேதபாரகரே, பரிசேயரே உங்களுக்கு ஐயோ" என கூறினார் (லூக்கா 11:44).

**மன்னிப்பு :**

கடவுளின் மன்னிக்கும் தன்மையை வெளிப்படுத்தினார். விபசாரத்தில் பிடிக்கப்பட்ட பெண்ணை கொண்டு வந்த யூதர்கள், ஆடவனை கொண்டு வரவில்லை. இயேசு அந்தப் பெண்ணை மன்னித்து, "நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாக தீர்க்கிறதில்லை. நீ போ இனி பாவம் செய்யாதே" என்றார். தலைவர்களுக்கு மன்னிக்கும் சிந்தையும் மறக்கும் தன்மையும் இருக்க வேண்டும். பழிவாங்கக்கூடாது. "கர்த்தர் தமக்கு சித்தமானவனை உயர்த்துவார்" (தானி. 5:19). "அதிகாரியாக்குவார்" என்பதை மறந்து விடக்கூடாது. ஒவ்வொரு தலைவருக்கும் கர்த்தர் இயேசுவின் பண்புகளை உருவாக்குவாராக.

---


**பரிபூரண ஜீவன் பத்திரிக்கை சந்தா மற்றும் உதவித் தொகை அனுப்ப வேண்டிய விபரம்**

குறிப்பு: காசோலை / டிராப்ட் எடுக்கும்போது Tamil District Council of SIAG என்று எடுத்து பரிபூரண ஜீவன் பத்திரிக்கைக்கு என்று குறிப்பிட்டு அனுப்பவும். மணியாடர் அனுப்புவதை தவிர்க்கவும். பத்திரிக்கை ஊழியத்திற்கு மணியாடர் மூலம் தான் அனுப்ப முடியும் என்ற நிலையில் உள்ளவர்கள் கீழ்காணும் முகவரிக்கு அனுப்பவும்.

**ஏ.ஜி. தலைமை அலுவலகம்**

30, நாவலர் நகர், மதுரை-625 016. போன் : 0452 4200664



# யாருக்கு வாசல்கள் திறக்கும்?

**Rev. K. பால்**
மூத்த போதகர், P.G.A.G சர்ச், புதுக்கோட்டை



ஒருவரும் பூட்டக்கூடாதபடி திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடி பூட்டுகிறவருமாகிய வல்லமையுள்ள தேவன், **"இதோ திறந்த வாசலை உனக்கு முன்பாக வைக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்''** என்று இன்று அவருடைய ஜனமாகிய நமக்கு வாக்குப்பண்ணுகிறவராயிருக்கிறார் (வெளி. 3:8).

உங்கள் வாழ்க்கையில் இதுவரையிலும் எல்லா வாசல்களும் அடைபட்டு போன ஒரு நிலையே காணப்படலாம். ஆசீர்வாதத்தின் வாசல் அடைபட்டு அமைதியுற்ற ஒரு நிலையில் நீங்கள் அலைந்து கொண்டிருக்கலாம். விடுதலையின் வாசல் அடைப்பட்டு வேதனையில் நீங்கள் உழன்று கொண்டிருக்கலாம். வெற்றியின் வாசல் அடைபட்டு தோல்வியிலே நீங்கள் துவண்டு போயிருக்கலாம். நன்மையின் வாசல் அடைக்கப்பட்டு தீங்கு அனுபவித்துக் கொண்டிருக்கலாம். எதிர்பார்ப்பின் வாசல் அடைக்கப்பட்டு ஏமாற்றத்தால் ஏக்கப் பெருமூச்சுக்களை எழுப்பிக் கொண்டிருக்கலாம். கற்பத்தின் வாசல் அடைபட்டு கண்ணீரில் உங்கள் வாழ்க்கையை கழித்துக்கொண்டிருக்கலாம். கலங்காதிருங்கள்!. கர்த்தர் உங்களைக் கைவிடமாட்டார். அவர் உங்களுக்கு சொல்லும் ஆறுதலான, நம்பிக்கைக்கு ஏதுவான ஒரு வாக்குத்தான், "இதோ திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்தேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்" என்பதாகும். வெண்கலக் கதவை உடைத்து இருப்புத் தாள்ப்பாள்களை முறிக்கும் கர்த்தர் உங்களுக்கு எதிரான அடைப்புகளையும் தகர்த்துப் போடுவார்.

### 1. சகோதர சிநேகம் :

இந்த வாக்குத்தத்தம் பழுதற்ற, குற்றம் சாட்டப்படாத கர்த்தருடைய நாமத்தை மறுதலியாமல் அவர் வசனத்தைக் கைக்கொண்ட சபையாகிய பிலதெல்பியா சபைக்கு கொடுக்கப்பட்டதாகும். பிலதெல்பியா என்பதற்கு சகோதர சிநேகம் (Brotherly Love) என்பது பொருள். சகோதர சிநேகம் என்ற பெயர் கொண்ட சபைக்குத்தான் ஆண்டவர் திறந்த வாசலை வாக்குப்பண்ணுகிறார். எனவே தேவனுடைய பிள்ளைகளாகிய நாமும் சகோதர சிநேகத்திற்கு நம் வாழ்க்கையில் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுவது அவசியமாகும்.

நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் தன்னுடைய மலை பிரசங்கத்திலே சகோதர சிநேகத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றார். தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக் கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான். தன் சகோதரனை வீண் என்று சொல்லுகிறவன் ஆலோசனை சங்கத் தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான். மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான். ஆகையால், நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையை செலுத்த வந்து, உன் பேரில் உன் சகோதரனுக்கு குறை உண்டென்று அங்கே நினைவு கூறுவாயாகில், அங்கேதானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முன்பு உன் சகோதரனோடு ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து என்றார் (மத்தேயு 5:22-24) மேலும், அவர் தம்முடைய ஜெபத்திலே ''பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல

ஒன்றாயிருக்கும்படிக்கு நீர் அவர்களை உம்முடைய நாமத்திலே காத்துக்கொள்ளும்" என்று வேண்டுகின்றார் (யோவான் 17:11).

சகோதர சிநேகத்தை ஆண்டவர் எவ்வளவாய் முக்கியப்படுத்துகிறார். நம்முடைய அனுபவம் என்ன? நம்முடைய வீட்டில், குடும்பத்தில், சபையில், சமுதாயத்தில் சகோதர சிநேகம் எந்த அளவில் இடம் பெற்றுள்ளது. நாம் ஒரே சரீரம் என்கிறோம். நமக்குள்ளே எத்தனை வேற்றுமைகள், எத்தனை கசப்புகள், வெறுப்புகள், எத்தனை பொறாமைகள், எரிச்சல்கள், சகோதரனை பகைத்து கொலை செய்த காயீன் ஆவிகளுக்கு முற்றுப்புள்ளி வைப்போம். கிறிஸ்துவின் அன்பிலே ஒருமைப்படுவோம். சகோதர சிநேகத்தை காத்து நடப்போம். திறந்த வாசலின் ஆசீர்வாதம் நம்மைத் தேடிவரும்.

**2. குற்றம் சாட்டப்படாத அனுபவம் :**

வெளிப்படுத்தின விசேஷத்தில் சொல்லப்பட்ட ஏழு சபைகளில் தேவனால் குற்றம் சாட்டப்படாத சபைகள் இரண்டு. அவைகளில் ஒன்று பிலதெல்பியா சபையாகும். இந்த குற்றம் சாட்டப்படாத சபைக்குத்தான் ஆண்டவர் "திறந்த வாசலை வைத்திருக்கிறேன்" என்கிறார். இந்த திறந்த வாசலின் ஆசீர்வாதம் நமக்கும் சொந்தமாக வேண்டுமென்றால் நாமும் தேவனுடைய பார்வையில் குற்றமற்றவர்களாய் காணப்பட வேண்டுமென்று அவசியமாகும். இதை அறிந்ததான சங்கீதக்காரன் தான், "குற்றமில்லாமையிலே என் கைகளைக் கழுவினேன்" என்கிறான். சங்கீதம் 73:13-ல் மேலும், "கர்த்தர் என் நீதிக்கும், தம்முடைய கண்களுக்கு முன்னிருக்கிற என் கைகளின் சுத்தத்திற்கும் தக்கதாக எனக்கு பதிலளித்தார்" என்கிறான். சங்கீதம் 18:24-ல் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் "என்னில் குற்றமுண்டென்று உங்களில் யார் சொல்லக்கூடும்" என்கிறார். உன்னத பாட்டிலே மணவாளன் மணவாட்டியைப் பார்த்து சொல்லும்போது, "என் பிரியமே, நீ பூரண ரூபவதி; உன்னில் பழுதொன்றுமில்லை" என்கிறார் (உன்.4:7).

இன்று நம்முடைய மனச்சாட்சி நம்மைக் குறித்து என்ன சாட்சி கொடுக்கிறது. நம்மில் வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவர் நம்மைக் குறித்து என்ன சாட்சி கொடுக்கிறார். நம்மை நாமே நிதானிப்போம். நம்மிலுள்ள பழுதுகளை சரி செய்வோம். திறந்த வாசலின் ஆசீர்வாதங்களை நாம் அனுபவிக்க ஆண்டவர் அருள் செய்வார்.

**3. கர்த்தருடைய நாமத்தை மறுதலியாமை :**

மேலும் பிலதெல்பியா சபையைக் குறித்து ஆண்டவர் சொல்லும்போது, "உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும் நீ என் நாமத்தை மறுதலியாமல்..." என்று குறிப்பிடுகின்றார். ஆம், பிலதெல்பியா சபை தனக்கு உண்டான கொஞ்சத்திலும் முறுமுறுக்காமல், தற்கிக்காமல் கர்த்தருடைய நாமத்தை மறுதலிக்காமல் முன்னேறும் சபை, இங்கே எல்லாம் சம்பூரணமாய் இருந்ததால் என்று குறிப்பிடாமல் 'கொஞ்சத்தில்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. கொஞ்சத்தில் உண்மையுள்ளவர்களை அநேகத்துக்கு அதிகாரியாக்குகிறவர் நம் ஆண்டவர் அல்லவா!

நம்முடைய அனுபவமென்ன? நமக்கு உண்டான கொஞ்சத்திலே நாம் தேவனைப் பிரியப்படுத்துகிறவர்களாய் இருக்கிறோமா? இல்லாவிட்டால் மற்றவர்களுக்கு நிறைய கொடுத்தார்; எனக்கு கொஞ்சம்தானே கொடுத்தார் என்று கூறி ஆண்டவருக்கு விரோதமாக முறு முறுக்கிறவர்களாய், அவருடைய நாமத்திற்கு விரோதமாக செயல்படுகிறவர்களாய், அவருடைய நாமத்தையே மறுதலிக்கிறவர்களாய் காணப்படுகிறோமா?

பரிசுத்தர் பவுல், "உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப் போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும், கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மை பிரிக்கிறவன் யார்?'' உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ... எதுவும் தேவனுடைய அன்பை விட்டு நம்மை பிரிக்கமாட்டாதென்று நிச்சயத்திருக்கிறேன் என்கிறார் (ரோமர் 8:35-39).

இந்த நிச்சயத்தைக் கொண்ட பவுலுக்கு ஆண்டவர் அநேக அற்புதமான வாசல்களை திறந்து கொடுத்தார். நாமும், எத்தனை இன்னல்கள் என் வாழ்வில் வந்தாலும் உம்மை பிரியேன்; உம்முடைய நாமத்தை மறுதலியேன், உமக்கு சாட்சியாய் ஜீவிப்பேன் என்று தீர்மானித்து செயல்படுவோமென்றால் நாமும் கர்த்தரின் திறந்த வாசலின் மேன்மையைக் காண்போம்.

**4. கர்த்தருடைய வசனத்தைக் கைக்கொள்ளுதல் :**

எல்லாவற்றிக்கும் மேலாக பிலதெல்பியா சபை அவருடைய வசனத்தைக் கைக்கொண்டு அதன்படி நடக்கும் சபை. கர்த்தருடைய வசனத்தை கைக்கொண்டு நடந்த சபைக்கே ஆண்டவர் "திறந்த வாசலை" வாக்குப் பண்ணுகிறார்.

கர்த்தரின் வார்த்தைக்கு, வசனத்துக்கு, வேதத்திற்கு நம்மிலே முக்கியத்துவம் உண்டா? நாம் எவ்வளவாய் கர்த்தருடைய வேதத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அவ்வளவாய் கர்த்தர் நமக்கும் முக்கியத்துவம் கொடுப்பார். நம்முடைய வாழ்க்கை நீர்ப்பாய்ச்சலான தோட்டம் போல செழிக்க வேண்டுமா? நாம் செய்வதெல்லாம் வாய்க்க வேண்டுமா? நம் வாழ்க்கை மகிழ்ச்சி நிறைந்ததாய் மாற வேண்டுமா? வேதமே வழி. கர்த்தருடைய வேதத்தை நேசித்து, வாசித்து, இரவும் பகலும் அதில் தியானமாயிருக்கிற மனுஷன் இப்படியாய் ஆசீர்வதிக்கப்படுவான்.

''உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது" என்கிறான் சங்கீதக்காரன் (சங்கீதம் 119:105). வேதத்தை கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது என்கிறார். நீதிமொழிகள் ஆசிரியர் (நீதி.28:9). "அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்கு திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதன்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" என்கிறார் யாக்கோபு (யாக்கோபு 1:22). நம்முடைய ஆண்டவரும், "...சிறுமைப்பட்டு ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன்" என்கிறார் (ஏசாயா 66:2).

நாமும் கர்த்தருடைய வசனத்தை நம்முடைய வாழ்க்கையில் முக்கியப்ப டுத்துவோம். வேதத்தை நேசிப்போம், வாசிப்போம், தியானிப்போம், வாழ்க்கையில் அனுபவமாக்குவோம், சத்தியத்தை கைக்கொண்டு வரும் நீதியுள்ள ஜாதிக்காக கதவுகளை திறவுங்கள் என்று கர்த்தர் கட்டளையிடுவார்.

பிலதெல்பியா சபைக்கு ஆண்டவர் கொடுத்த வாக்குத்தத்தம் பொய்யாய் போகவில்லை. 18-ஆம் நூற்றாண்டிலே உலகமெங்கும் சபைகள் வளர்ந்து பெருகத்தக்கதாக சுவிஷேசத்திற்காக அடைபட்டிருந்த வாசல்களையெல்லாம் கர்த்தர் திறந்து திறந்த வாசலின் அனுபவத்தை சபைக்கு கட்டளையிட்டார். பிலதெல்பியாவின் அனுபவமாகிய சகோதர சிநேகம், குற்றமற்ற நிலை, கர்த்தரின் நாமத்தை எந்த சூழ்நிலையிலும் மறுதலியா தன்மை, வேத வசனத்தை முக்கியப்படுத்தி கைக்கொள்ளும் அனுபவம் ஆகியவைகளை நம் சொந்த அனுபவமாக்குவோம். திறந்த வாசலின் ஆசீர்வாதங்கள் நமக்கும் சொந்தமாகும். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பார்.



# 1,2 நாளாகமத்தின் புத்தகங்கள்

## புத்தக அறிமுகம்

Rev. Dr. சாமுவேல் ராஜ் R.
All India National Director, Global University

“நாளாகமம்” என்பது, கால வரலாற்றுப் பதிவு எனப் பொருள்படும். இப்புத்தகங்களை இஸ்ரவேலரின் மீட்பின் சரித்திரம் எனவும் அழைக்கலாம். எபிரெய வேதாகமத்தில் இவை இரண்டும் ஒரே புத்தகமாக இருந்தன. பிற்காலத்தில் அவை இரண்டு புத்தகங்களாகப் பகுக்கப்பட்டன.

இராஜாக்களின் இரண்டு புத்தகங்களிலும் இஸ்ரவேல் (வடக்கு ராஜ்ஜியம்), யூதா (தெற்கு ராஜ்ஜியம்) ஆகியவற்றின் சரித்திரங்கள் தனித்தனியே தரப்பட்டுள்ளன. ஆனால் 1,2 நாளாகமப் புத்தகங்கள், யூதா தேசத்தின் விபரங்களை மட்டுமே கூறுகின்றன.

இப்புத்தகங்களின் ஆசிரியர் எஸ்றா. கிமு 450க்கும் 420க்கும் இடைப்பட்ட காலத்தில் அவர் இப்புத்தகங்களை எழுதினார். இவ்விரண்டு புத்தகங்களுடன், எஸ்றா மற்றும் நெகேமியா புத்தகங்களையும் சேர்த்து வாசித்து பயனடைவது நல்லது. ஏனெனில், இவை சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தவர்களுக்காக எழுதப்பட்டவையாகும்.

**தேவன் மோசேயுடனும் தாவீதுடனும் ஏற்படுத்திய உடன்படிக்கைகள்:**

இரண்டு முக்கிய காரியங்களைச் சிறையிருப்பிலிருந்துத் திரும்பி வந்த மக்களுக்கு அறிவுறுத்தி நாளாகமப் புத்தகங்கள் எழுதப்பட்டன; அவை:

**1.மோசேயின் உடன்படிக்கை:** இது அனைத்து இஸ்ரவேலருடனும் தேவன் ஏற்படுத்தியது. எகிப்திலிருந்து அவர்கள் விடுதலைபெற்று வந்த பின் சீனாய் மலையில் வைத்து இவ்வுடன்படிக்கையை தேவன் ஏற்படுத்தினார் இஸ்ரவேலரை மற்ற தேசங்களிலிருந்து பிரித்தெடுத்து,தனிச்சிறப்பு வாய்ந்த தேசமாகத் தெரிந்துகொண்டார்.

இந்த உடன்படிக்கையின்படி, இஸ்ரவேலர் தேவனுடைய பிரமாணங்களுக்குக் கீழ்படிந்து நடந்தால், அவர் அவர்களை ஆசீர்வதிப்பார். அவருடைய பிரமாணங்களை இஸ்ரவேலர் தள்ளிவிட்டால் தேவன் அவர்களை சிட்சித்து ஒழுங்குப்படுத்துவார். அந்த உடன்படிக்கைப் பத்திரம் மோசேயின் நியாயப் பிரமாணம் அல்லது பஞ்சாகமம் என்று அறியப்படுகிறது. இதுவே,வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகங்களாகும்.

**2.தாவீதின் உடன்படிக்கை:** இது தேவன் தாவீதுடன் ஏற்படுத்திய உடன்படிக்கை யாகும். தேவனுக்கு ஒரு வீட்டைக் கட்டுவேன் என ஆலயத்தைக் கட்ட தாவீது விரும்பினான். ஆனால் தேவன் தாவீதுக்கு ஒரு வீட்டைக்கட்டிக் கொடுத்தார். தாவீதுடன் தேவன் ஏற்படுத்திய உடன்படிக்கை என்ன? அவனுடைய வாரிசு என்றென்றும் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் என்பதே அந்த உடன்படிக்கை யாகும். அது நித்திய உடன்படிக்கை என்றும் அழைக்கப்படுகிறது.

இந்த உடன்படிக்கைக்கு தேவன் உண்மையுள்ளவராயிருந்தார். வடக்கு ராஜ்ஜியமாகிய இஸ்ரவேல் கிமு 722ல் அசீரியாவுக்குச் சிறைப்பட்டுச் சென்றபோதும், தாவீதின் வம்சம் தொடர்ந்து தெற்கு ராஜ்ஜியமாகிய யூதாவை கிமு586வரை ஆண்டு வந்தது. பிற்காலத்தில் தாவீதின் வம்சத்தில் தோன்றிய இயேசு கிறிஸ்துவில் இந்த

உடன்படிக்கை இன்றும் நிலைத்திருக்கிறது. இயேசு தாவீதின் குமாரனாகவும், ராஜாதி ராஜாவாகவும் அறியப்படுகிறார் (மத்.1:1; வெளி. 17:14).

**நாளாகமப் புத்தகங்களின் பொருளடக்கம்:**

1,2 நாளாகமப் புத்தகங்கள் இஸ்ரவேல் தேசத்தின் சரித்திரத்தை நமக்குத் தருகிறது; இஸ்ரவேல் தேசத்தின் அரசர்கள்,அவர்கள் செய்த யுத்தங்கள், சமயநிகழ்வுகள், பொருளாதார ஏற்ற இறக்கங்கள் ஆகியவை இப்புத்தகங்களில் தரப்பட்டுள்ளன. முக்கியமாக, இஸ்ரவேலின் ராஜாக்களைப் பற்றியும், தேவன் தமது வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற உண்மையுள்ளவராக இருந்தார் என்பது பற்றியும் நமக்குச் சொல்லுகின்றன.

இப்புத்தகங்களில் மிக நீளமாகத் தரப்பட்டுள்ள நீண்டபெயர் பட்டியல்கள், முதல் 9 அதிகாரங்களில் வரும் வம்ச அட்டவணைகள் மற்றும் சரித்திர நிகழ்வுகள் இப்புத்தகங்களை வாசிப்போருக்கு சலிப்புத் தட்டுகிறது போலிருக்கிறது. உதாரணமாக,1நாளா 1:1-2 வேதபகுதியைப் பாருங்களேன்!

ஆதாம், சேத், ஏனோஸ், கேனான், மகலாலெயேல், யாரேத்...,எனப் பெயர்ப்பட்டியல் தொடர்ந்து செல்லுகிறது. அதனைத் தொடர்ந்து, வம்ச அட்டவணைகளும் தொடர்ந்துள்ள ஒன்பது அதிகாரங்களில் நீண்டு செல்கிறது. இவையெல்லாம் சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்த மக்களுடைய வாழ்க்கைச் சரித்திரத்துடன் சம்மந்தப்பட்டவை; எனவே அவை அவர்களால் விரும்பி வாசிக்கப்பட்டவையாகும். ஆனால், இப்புத்தகங்களில் இவ்விதப் பெயர்ப்பட்டியலும், வம்ச அட்டவணைகள் மட்டுமல்ல.அவைதவிர, தேவன் தாவீதுடன் ஏற்படுத்திய உடன்படிக்கைப் பற்றியும் அவ்வுடன்படிக்கைக்குப் பின்பு நடந்தேறிய சம்பவங்கள் பற்றிய விபரங்களையும் நாம் வாசிக்கிறோம். இந்த விபரங்கள் நான்கு பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன.

**1.ஆதாம் முதல் தாவீது வரை** (1நாளா. 1:1-9:44)

முதல் ஒன்பது அதிகாரங்களில், ஆதியாகமம் 2ம் அதிகாரம் முதல் 1சாமுவேல் 15ம் அதிகாரம் வரையுள்ள சரித்திர நிகழ்வுகள், பெரும்பாலும் வம்ச அட்டவணைகளாகத் தரப்பட்டுள்ளன. இதில், தாவீதின் பூர்வீகம் குறித்த விபரங்களை ஆராய்ந்து, அத்துடன் இஸ்ரவேலின் 12 கோத்திரக் குடும்பங்களின் விபரங்களும் சரித்திரமாய் எழுதப்பட்டுள்ளன.

**2.தாவீதின் ஆட்சிகாலம்** (1நாளா. 10:1-29:30)

தாவீது தேவனுடைய கற்பனைகளைப் பின்பற்றி நடந்த நல்ல அரசன். இஸ்ரவேலின் 12 கோத்திரங்களையும் ஒரு தேசமாக ஒருங்கிணைத்து, அவர்களுடைய பகைஞரின் கைகளினின்று தேசத்தை விடுவித்தான். தேவன் தாவீதுடன் தமது உடன்படிக்கையை ஏற்படுத்தினார். தாவீதின் குமாரனாகிய சாலமோனுடைய சிம்மாசனம் என்றென்றும் நிலைத்திருக்கும் என்பதே அந்த உடன்படிக்கை; இதை 1 நாளாகமம் 17ம் அதிகாரத்தில் காண்கிறோம். தேவனுக்கென்று ஒரு ஆலயத்தைக் கட்ட தாவீது திட்டமிட்டான். தேவன் தாவீதின் கையினால் அது கட்டப்படுவதை விரும்பவில்லை, மாறாக அவனுடைய குமாரன் சாலமோன் காலத்தில் தேவாலயம் கட்டப்படும் என்று அறிவித்தார். எனவே,ஆலயத்தைக் கட்டவேண்டுமென்றும், சாலமோனும் அவனுடைய ஜனங்களும் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்றும், தாவீது அவர்களுக்குக் கட்டளையிட்டான் (1நாளா. 28:8-9).

**3.சாலமோனின் ஆட்சிகாலம்** (2நாளா. 1:1-9:31)

சாலமோன் ராஜாவானபோது, தேவன் அவனுக்குச் சொப்பனத்தில் தோன்றி அவன் விரும்புவதைக் கேட்கச் சொன்னார். அவனோ, ஐசுவரியத்தையும், நீடித்த

நாட்களையும்,அவனது சத்துருக்களின் பிராணனையும் கேளாமல், தனக்குத் தேவன் ஞானமுள்ள இருதயத்தைத் தரவேண்டும் என்று கேட்டான். இந்த விண்ணப்பம் ஆண்டவருடைய பார்வைக்கு உகந்த விண்ணப்பமாயிருந்தது. எனவே,தேவன் அவனுக்கு அவன் கேட்ட ஞானத்தைத் தந்ததுமட்டுமல்லாமல், திரளான செல்வத்தையும், வல்லமையையும், மகிமையையும் தந்தருளினார். சாலமோன் எருசலேமில் ஆண்டவருக்கென்று மாளிகைபோல் அமைந்த பிரமாண்டமான ஆலயத்தைக் கட்டினான்.

சாலமோனின் 40வருட ஆட்சிக் காலத்தில் இஸ்ரவேல் தேசம் பெயர் புகழுடன் செழித்தோங்கியிருந்தது. அதன் அண்டைஅயல் நாடுகளின் மத்தியில் முக்கியத்துவம் வாய்ந்த தேசமாகவும் விளங்கிற்று, (2நாளா 9:13-30).இதைப் பொற்காலம் என்று அழைக்கலாம்.

**4.சாலமோனுக்குப்பின் பாபிலோன் சிறையிருப்புவரை** (2நாளா 10:1-36:23)

சாலமோன் மரித்தபின்பு இஸ்ரவேல் தேசம் இரண்டாகப் பிரிந்தது. பத்து கோத்திரத்தினர் கலகம்பண்ணிப் பிரிந்து சென்று தங்களை வடக்கு ராஜ்ஜியம் எனத் தனிமையாக்கிக்கொண்டனர். மீதமிருந்த இரண்டு கோத்திரங்களாகிய யூதாவும்,பென்யமீனும் பிரிந்துசென்றவர்களுடன் செல்லாமல், தாவீதின் வம்சத்துக்கு உண்மையுள்ளவர்களாயிருந்தனர். இவர்கள் தெற்கு ராஜ்ஜியம் என அழைக்கப்பட்டனர். இவர்களே தாவீதின் ராஜரீக வம்சா வழியினராகவும் இருந்தனர்.

இதைத் தொடர்ந்து பல்வேறு அரசர்கள் இஸ்ரவேலின் வடக்கு, தெற்கு ராஜ்ஜியங்களை எவ்விதம் ஆட்சி செய்தனர் என்ற விபரம் தரப்பட்டுள்ளது. சாலமோனுக்குப் பின்வந்த அரசர்கள், தாவீதைப்போல் இருக்கவில்லை. தேவனுடைய ஆலயத்தையும், நியாயப்பிரமாணங்களையும், புறக்கணித்து தள்ளிவிட்டனர். தேவன் அவர்களை எச்சரிக்கும்படி அனுப்பித்தந்த தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுத்தினர். தங்களைச் சுற்றிலுமிருந்த புறஜாதியார் வணங்கிய அந்நிய தெய்வங்களைத் தங்களுடைய தாக்கிக்கொண்டனர். அவர்களிலும் சிலஅரசர்கள் கடவுளுக்குப் பயந்தவர்களாயிருந்தனர்; மக்கள் மத்தியில் எழுப்புதலையும் கொண்டுவந்தனர்.

ஜனங்கள் தம்மை நிராகரித்தபடியால்,தேவன் அவர்களை சிட்சைக்குட் படுத்தினார்.பெருந்தண்டனையாக பாபிலோனியர் வந்து அவர்களை முறியடித்து, சிறைக் கைதிகளாக பாபிலோனுக்குக்கொண்டு சென்றனர். எருசலேம் தேவாலயம் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டது. எரேமியா 25:11-ல் உரைத்தத் தீர்க்கதரிசனத்தின் படியே அவர்களனைவரும் சிறைக்கைதிகளாக நாடுகடத்தப்பட்டனர். 70 ஆண்டுகள் பாபிலோன் ராஜாவைச் சேவித்தனர். பின்பு, பெர்சிய மன்னனாகிய கோரேஸ் என்பவன் ஒருபுதியக் கட்டளையைப் பிறப்பித்தான் (எஸ்றா 1:1). விருப்பமுள்ள யூதர் அனைவரும் தங்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பவும்,முன்பு இடித்து அழிக்கப்பட்ட தேவாலயத்தை எடுத்துக் கட்டவும் அவர்களுக்குக் கட்டளையிட்டான்.

**நாளாகமப் புத்தகங்களின் கருப்பொருள்:**

பொதுவாக, நாளாகமப் புத்தகங்கள் இரண்டும் இரண்டு முக்கியமானக் கருப்பொருள்களில் கவனம் செலுத்துகின்றன: 1).தாவீதுடன் தேவன் ஏற்படுத்திய உடன்படிக்கை.இந்த உடன்படிக்கை பற்றி நாம் ஏற்கனவே கண்டோம். 2).தேவாலயம்.இப்புத்தகங்களை நாம் வாசிக்கும்போது, தேவாலயம் மக்கள் நாடிவரும் முக்கிய இடத்தில் அமைந்திருந்தது என்பதைக் காணலாம். தாவீது இந்த தேவாலயத்தைக் கட்ட வேண்டும் எனத் திட்டம்பண்ணினான்; சாலமோன் அதைக்கட்டி முடித்தான்; ராஜாக்கள் இங்கு முடிசூட்டப்பட்டனர்; தீர்க்கதரிசிகள் இங்குக்

கொலைசெய்யப்பட்டனர்; நியாயப்பிரமாணம் இங்கு கண்டுபிடிக்கப்பட்டது. எனவே தேவாலயத்துக்கு இப்புத்தகத்தில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

**நாளாகமத்தின் கருப்பொருள் வசனம்:** 1நாளாகமம் 17:12

1,2 நாளாகமப் புத்தகங்களின் கருப்பொருள் வசனம் இதுவே: "அவன் (சாலமோன்) எனக்கு ஒரு ஆலயத்தைக் கட்டுவான். அவன் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன்".

ஆனால், யூத ஜனங்கள் கர்த்தரைவிட்டு, அந்நிய தெய்வங்களுக்கு அந்த ஆலயத்திலேயே தூபம்காட்டி, தங்கள் கையின் கிரியைகளினால் அவருக்குக் கோபமூட்டினார்கள். எனவே கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் ஊற்றப்பட்டது. அது அக்கினியாய் எரியுமளவுக்குத் தீவிரமடைந்தது.

2நாளாகமம் 34:24,25 வசனங்களில் உல்தாள் என்னும் தீர்க்கதரிசியானவள் சொல்லுவதைக் கவனியுங்கள்:

இந்த தீர்க்கதரிசன வார்த்தைகளின்படியே, யூதா ஜனங்கள் 'இதோ யூதாவின் ராஜாவுக்கு முன்பாக வாசிக்கப்பட்ட புஸ்தகத்தில் எழுதியிருக்கிற சகல சாபங்களுமாகிய பொல்லாப்பை நான் இந்த ஸ்தலத்தின் மேலும் இதின் குடிகளின்மேலும் வரப்பண்ணுவேன்.

அவர்கள் என்னைவிட்டு,தங்கள் கைகளின் கிரியைகள் எல்லாவற்றிலும் எனக்குக் கோபம் உண்டாக்க வேறே தேவர்களுக்குத் தூபங்காட்டினபடியினால், என் உக்கிரம் அவிந்துபோகாதபடி இந்த ஸ்தலத்தின்மேல் இறங்குமென்று கர்த்தர் உரைக்கிறார்.

இந்த வார்த்தைகளின்படியே மூன்று காலக்கட்டங்களில் (கிமு 606,597,586) பாபிலோனுக்குச் சிறைசென்றனர், எழுபது ஆண்டுகால சிறைவாசத்துக்குப்பின் பாபிலோனிலிருந்தும், பெர்சியாவிலிருந்தும் மூன்று பிரிவினராகத் திரும்பி வந்தனர். 1).கி.மு536ல் செருபாபேலின் தலைமையிலும் (எஸ்றா 2ம் அதிகாரம்) 2). கிமு 457ல் எஸ்றாவின் தலைமையிலும் (எஸ்றா 7ம்அதிகாரம்) 3).கிமு445ல் நெகேமியாவின் தலைமையிலும் திரும்பி வந்தனர். (நெகேமியா 2ம்அதிகாரம்).திரும்பி வந்தவர்கள் கர்த்தரின் உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும் என்பதைப் போதிக்க நாளாகமப் புத்தகங்களும் எஸ்றா மற்றும் நெகேமியா புத்தகங்களும் அவர்களுக்காக எழுதப்பட்டன.

மோசே உபாகமப் புத்தகத்தில் தீர்க்கதரிசனமாய் உரைத்த காரியங்களையும் நாளாகமப் புத்தகங்களில் காண்கிறோம்.

1,2 ராஜாக்களின் புத்தகங்கள் சரித்திரமாக எழுதப்பட்டவை. ஆனால் 1,2 நாளாகமப் புத்தகங்கள் முழு பழைய ஏற்பாட்டுச் சரித்திரத்தை உள்ளடக்கி யிருந்தாலும்,சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தோருக்கு மேசியாவைப் பற்றிய நம்பிக்கையைக் கொடுத்து, சரித்திரப் பின்னணிய ஆதாரங்களை மனதில்வைத்து, இஸ்ரவேலின் தேவனுடைய மக்களாய் வாழவேண்டும் என்பதை வலியுறுத்தவும் அவர்களை ஊக்குவிக்கவும் எழுதப்பட்டவை என்பதை நாம் அறியவேண்டும்.

நிறுத்தி நிதானித்து சேர்த்து வாசித்தல் 1,2 நாளாகமப் புத்தகங்களும், எஸ்றா மற்றும் நெகேமியா புத்தகங்களும், அன்று சிறையிருப்பிலிருந்து திரும்பி வந்தோருக்கு பயன்பட்டது போன்று, இன்று நமக்கும் சரித்திரப் பின்னணியங்களுடன் புரிந்து கொள்ளுதலையும் ஆசீர்வாதங்களையும் அள்ளித் தருகின்றன.



# வடஇந்திய ஊழியங்கள்

Rev. J. தேவதாசன் கலையரசன்
உதவி இயக்குநர், வடமேற்கு மிஷன்

TAMIL DISTRICT MISSIONS
India and beyond...

நாம் வாழும் நாட்கள் சபையின் நாட்கள். சபை சிகரத்தைத் தொடும் நாட்கள். கூட்டம் கூட்டமாக. ஜாதி ஜாதியாக திரள் கூட்ட மக்கள் சபைகளைத் தேடி ஓடி வரும் நாட்கள். வாழ வழி தெரியாமல் திகைத்து நிற்கும் மக்கள், வாழும் கலை நிபுணர்களைத் தேடி ஓடுகிறார்கள். பல வழிகளில் முயற்சித்து எங்கும் தோல்வியே கண்டு, வாழும் வழி கற்றுக் கொடுக்கும் இடம் திருச்சபைதான் என கண்டுபிடிக்கும் காலம் இது. எனவே தான் முன்பு நாம் அழைத்தபோது சபைக்கு வராதவர்களும், இந்நாட்களில் கூட்டம் கூட்டமாக சபைகளுக்கு படை எடுக்கத் துவங்குகிறார்கள். இது கடைசிக்காலம் என்ற உணர்வுள்ள அத்தனை சபைகளிலும் இதுபோன்ற புதிய ஆத்துமாக்களின் வருகை வருடந்தோறும் அதிகரிப்பது நிச்சயம்.

கர்த்தருடைய கடைசிக் கால வாக்குத்தத்தம் (ஏசாயா 2:2-3) நிறைவேறுவதால் உண்டாகும் எழுச்சியுடன் நமது மிஷன் ஊழிய ஈடுபாடும், நமது சபைகளின் எழுச்சியை இருமடங்காக்குகிறது. நமது சபையே ஒரு சிறிய சபை, தேவையுள்ள சபை என்ற மன நிலையால் ஏற்படும் ஸ்தம்பித்தலை உடைத்து முன்னேற வட இந்தியாவின் ஊழிய சவால்களும், வாய்ப்புகளும் ஒரு கிரியா ஊக்கியே.

## I. தென்னிந்திய படையெடுப்பு

வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது என்ற அரசியல் சுலோகம் அதிகம் பேசப்பட்ட 1950களிலேயே, ஆவிக்குரிய சூழலில் **வடக்கு அழிகிறது தெற்குதான் காப்பாற்ற** வேண்டும் என்ற சிந்தனை மெல்ல வளரத் துவங்கியது.

1970களில் தென்னிந்தியாவில் இருந்து சில மிஷன் இயக்கங்கள் வட இந்திய மாநிலங்கள் நோக்கி நகரத் துவங்கின. எனக்காய் பேசிட நாவு வேண்டும் என்னைப் போல் அலைந்திட கால்கள் வேண்டும் என்ற அறைகூவல் அநேக தமிழக வாலிபர்களை மாற்றுக் கலாச்சார ஊழியத்தில் கோதுமை மணிகளாக, அர்ப்பணிக்க வைத்தது.

2000 வருடம் கட்டமைக்கப்பட்ட மூட நம்பிக்கைகளில் மூழ்கி கிடந்த மக்கள் விடுவிக்கப்பட்டு இரட்சகராம் இயேசுவிடம் கூட்டம் கூட்டமாக வழிநடத்தப்பட்டார்கள். இதுவரை சுவிசேஷத்தைக் கேள்விப்படாத அநேக மக்கள், முதல் தலைமுறைக் கிறிஸ்தவரானார்கள்.

1990களில் AG ஸ்தாபனத்தால் அறிவிக்கப்பட்ட அறுவடையின் பத்தாண்டுகள் (Decade of Harvest) வட இந்திய ஊழியங்களில் பெரும் திருப்பு முனையை தமிழ்பிரதேச வரலாற்றில் ஏற்படுத்திவிட்டது. அதற்கு முன்பே தமிழ் பிரதேசத்திலிருந்து சென்று வட இந்திய தரிசனம் பெற்று ஊழியம் செய்த சில முக்கிய தலைவர்களில் ஒருவர் Rev.ராபர்ட் ஜெயராஜ், அவர்கள் மூலம், துவக்கப்பட்ட அல்லது தாங்கப்பட்ட வடஇந்திய சபைகள் ஏராளம் உண்டு.

## II. வடஇந்திய ஊழியங்களில் நமது தமிழ்பிரதேசத்தின் முக்கிய பங்கு

நமது தலைவர்கள், அடிக்கடி சொல்வது 1990க்கு முன்னால் இங்கு இருந்த 200 சபைகளின் பொருளாதார நிலை மிக கடினமாகவே இருந்தது. பொருளாதார

சுயசார்பு சபைகள் மிகமிக குறைவாயிருந்திருக்கின்றன. நமக்கு மிஷனரிகள் உதவின காலம் முடிந்து தமிழ் பிரதேசம் வடஇந்திய சபைகளுக்கு மிஷனரிப் பொறுப்பை எடுத்ததும், இங்குள்ள சபைகளின் பொருளாதாரம் ஆசீர்வாதமான நிலையை அடைந்தது. பத்தாண்டு அறுவடைத்திட்டம் ஆரம்பிக்கும் முன்னரே மிஷனரிகளை அனுப்பியும் பணங்களையும் முதலீடும் செய்த அனைத்து சபைகளும் இன்று பெரிய சபைகளாக (Mega Church) வளர்ந்திருக்கிறது. தமிழ் பிரதேசத்தின் இந்த நல்லமாதிரி இன்று வட இந்திய சபைகளையும் ஊக்கப்படுத்தி எழுப்பிக் கொண்டிருக்கிறது.

ஆகவேதான் உறுதிபட, உரக்கச் சொல்கிறோம். நீங்களும் வடஇந்திய ஊழியத்தில் ஒரு நெருங்கின தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

## III. தமிழ்பிரதேச மிஷன் பணி சவால்களும் வாய்ப்புகளும்

- தமிழகத்திற்கு அப்பால் தென்னிந்தியாவிலும் (உ-ம்) கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா நாம் மிஷனரிகளை அனுப்புகிறோம், தாங்குகிறோம். மிஷன் குறித்து எளிதான புரிதல் கருதி, 'வடஇந்திய ஊழியங்கள்' என்கிறோம்.
- ஒன்றிரண்டு மிஷன் கன்வென்ஷன்களில் விசுவாசிகளிடம் கேட்கப்பட்ட கேள்வி இது!

  ❖உங்களுக்குத் தெரிந்த ஏதாகிலும் மிஷன் இயக்கங்களின் பெயர்களை கூறுங்கள் என்றபோது, 5 அல்லது 6 இயக்கங்களின் பெயர்களை சொல்ல அறிந்த அவர்களுக்கு AG மிஷன் இயக்கம் செயல்படுவதைக் குறித்து சொல்லத் தெரியவில்லை.
- தமிழ் பிரதேச சபையார் அனைவரும் AG மிஷன் இயக்கம் ஒன்று இருக்கிறது. அதன்மூலம் தமிழ் பிரதேசம் என்ன சாதிக்கிறது என்பதை அறிந்துவிட்டால், இப்போது நாம் செய்யும் ஊழியத்தைவிட மூன்று மடங்கு ஊழியம் இவ்வருடத்திலேயே செய்துவிடமுடியும்.
- நமது தமிழ்பிரதேசம் மூலம் அனுப்பப்பட்டு அல்லது தாங்கப்பட்டு வரும் மிஷனரிகளின் எண்ணிக்கை 650ஐத் தாண்டிக் கொண்டிருக்கிறது.
- ஒரு மிஷனரிக்கு குறைந்தபட்சம் 4000 முதல் 5000 வரையும், வேறுபலருக்கு அவர்களின் தேவைகளைப் பொறுத்து அதற்கு அதிகமாகவும் கொடுத்து தாங்கி வருகிறோம்.
- இதுவரை வடஇந்தியாவில் எண்ணற்ற இடங்கள் வாங்கப்பட்டு, ஆலயங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.
- கடந்த Lockdown காலத்தில் மாதாந்திர உதவியுடன் கூடுதல் உதவித்தொகை தமிழ் பிரதேசத்தால் கொடுக்கப்பட்டது. அங்குள்ள சபைகளால் பாராட்டப்படுகிறது.

## IV தமிழ்பிரதேச மிஷன் ஊழியங்களின் தனிசிறப்பு

- நம்மால் அனுப்பப்பட்ட நமது தமிழக மிஷனரிகள், சுவிசேஷம் அறிவிப்பதுடன் நிறுத்திவிடாமல் சபைகளை ஸ்தாபிக்கிறார்கள்.
- அதாவது 650 நற்செய்தியாளர்களை நாம் தாங்கவில்லை, 650 புதிய சபைகள் உருவாக நமது பணங்கள் காரணமாகிறது, எத்தனை ஆசீர்வாதம்!
- இதனால் பிற மிஷனரி இயக்கங்களே குறுகிய காலத்திற்குள் தமிழ்பிரதேசம் செய்து வரும் மிஷன் பணிகளையும், சாதனைகளையும் மெச்சிக் கொள்கிறார்கள்.

- நமது சபை ஸ்தாபித்தலும் கிராமங்களை மையமாக கொண்டதல்ல, பவுலின் நகர அணுகுமுறை கையாளப்பட்டு (Urbanic approach) பலமுக்கிய தலைநகரங்களில், பட்டணங்களில் சபைகள் நிறுவப்படுகின்றன.
- இதனால் கிராமங்களிலிருந்து வரும் உள்ளூர்வாசிகள் இரட்சிக்கப் படுவதுடன், கிராமங்களில் உள்ளூர்வாசிகளால் பல புதிய கிளை சபைகள் ஸ்தாபிக்கப்படுகின்றன. சபைகள் வேகமாக பெருகுகின்றன. ஒரு மாவட்டத்திற்கு ஒரு சபை இருந்த கடந்தகால நிலை மெல்ல மாறி வருகிறது.
- இந்த அணுகுமுறையால் காலத்துக்கும் தென்னிந்திய மிஷனரிகள் செய்யும் ஊழியமாக நமது ஸ்தாபன வட இந்திய ஊழியம் இல்லை. பல சுதேச ஊழிய தலைவர்கள் எழும்புகிறார்கள். சுதேச ஊழியர்கள் அதிகளவில் எழும்பி எல்லா மாநிலங்களிலும் நிறைந்திருக்கிறார்கள்.
- நமது தமிழ்பிரதேச மிஷன் ஊழியங்களைச் சொல்ல இன்னும் ஏராளம் இருக்கிறது. இவ்விவரங்களை நமது விசுவாசிகள் அறியும்போது ஊக்கம் கொள்வார்கள். பங்களிப்பை அதிகரிப்பார்கள். அது உங்கள் ஸ்தல சபை வளர்ச்சிக்கும், எழுச்சிக்கும் காரணமாகும்.

## V. வடஇந்திய ஊழிய தேவை

1. தமிழ்பிரதேச சபைகளில் ஒரு சில சபைகள் நாங்கள் இத்தனை மிஷனரிகளைத் தாங்குகிறோம் என்று சொல்லி தாங்கி வருகிறார்கள். அதுவல்லாமல் வேறு சில சிறிய சபைகள் மாதந்தோறும் குறைந்தபட்சம் 100 ரூபாவயாவது கொடுக்க வேண்டும் என விரும்பி கொடுத்து வருகிறார்கள்.
2. இப்படி சேகரிக்கப்படும் பணங்களை நமது தமிழ் பிரதேசம் மாதந்தோறும் உதவி பெறும் மிஷன் ஊழியர்களுக்கு அனுப்புகிறது.

## அனுப்புவோர் தேவை :

1. குறைந்தபட்சம் உங்கள் சபையிலிருந்து ஒரு மிஷனரி அனுப்ப வேண்டுகிறோம்.
2. குறுகிய கால மிஷன்டிரிப் செல்லுங்கள். (அப்போதுதான் உண்மையான பாரம் ஏற்படும்).

## தாங்குவோர் தேவை

1. மாதம்தோறும் மிஷனரிகளுக்கான ஆதரவு தொகை.
2. ஆலயம் கட்ட, உபகரணங்களை வாங்கிட உதவலாம்.
3. வேதாகம மொழிபெயர்ப்புக்கு உதவிடலாம்.
4. மக்கள் கூட்டம் ஊழிய அணுகு முறையின்படி – அங்கு சந்திக்கப்படாத மக்கள் கூட்டத்தை தத்து எடுக்கும் ஊழியம் செய்யலாம்.

## இறுதியாக

உன்னத பெலன்பெற்று உங்கள் சபை, ‘உள்ளூர் ஊழியத்தை முடித்துவிடாமல் உலகத்தின் கடைமுனை மட்டும் உங்கள் சபையின் செல்வாக்கு பரவட்டும் (அப்.1:8) அதற்கு உங்கள் வடஇந்திய பங்களிப்பும் முதல்படியாகட்டும்.



# தேவனுக்குப் பயப்படும் பயம்

**Rev. V.J. பாலஸ்**

தலைமைப் போதகர், சிமிர்னா A.G. சபை, வண்ணாரப்பேட்டை

"மோசே ஜனங்களை நோக்கி : பயப்படாதிருங்கள்; உங்களைச் சோதிப்பதற்காகவும், நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்குத் தம்மைப் பற்றும் பயம் உங்கள் முகத்திற்கு முன்பாக இருப்பதற்காகவும், தேவன் எழுந்தருளினார் என்றான்" (யாத்திராகமம் 20:20).

தேவனுடைய ஜனங்கள் தேவனைப்பற்றும் பயத்தோடு இருக்கும்படியாக தேவன் எழுந்தருளுகிறார். தேவன் சபைகளில் எழுந்தருளி நம்மோடு பேசுகிறார் என்றால் தேவனைப் பற்றும் பயம் நம்மோடு இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் நீங்கள் சபையில் ஜெபிக்கும்போதெல்லாம் ஆண்டவரே உமக்குப் பயப்படும் பயத்தை எனக்குத்தாரும் என்று ஜெபிக்க வேண்டும். தேவனுக்குப் பயப்படும் பயம் நமக்குள் இருக்குமானால் நாம் ஒருபோதும் தேவனை விட்டு விலக முடியாது. ஒவ்வொரு நாளும் அதிகாலையில் எழும்பி ஜெபிக்கும்போது முதலாவது ஆண்டவரே உமக்குப் பயப்படும் பயத்தை எனக்குத்தாரும் என்று ஜெபித்தால் ஆண்டவர் தீமையான காரியங்கள் செய்யாதபடிக்கு நம்மை அந்த நாள் முழுவதும் பாதுகாப்பார்.

## தேவ பயத்தினால் குடும்பம் இரட்சிக்கப்படுகிறது

அப்போஸ்தலர் 10:2-ம் வசனத்தில் கொர்நேலியு வீட்டாரணைவரோடும் தேவனுக்குப் பயப்படுகிறவனாயிருந்தான். சிலர் குடும்பத்தில் ஒருவர் மட்டும் கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களாக இருப்பார்கள். ஆனால் மற்றவர்கள் கர்த்தருக்குப் பயப்பட மாட்டார்கள். சபைக்கு வரமாட்டார்கள். தேவனுக்கு விரோதமான காரியங்களை செய்துகொண்டு இருப்பார்கள். ஒரு குடும்பத்திலே ஒருவர் தேவனுக்குப் பயந்திருந்தால் அந்த குடும்பத்திலே அனைவரும் கர்த்தருக்குப் பயப்படத்தக்கதாக தேவன் அந்த குடும்பத்தில் கிரியை செய்கிறார். அந்த குடும்பத்தை இரட்சித்து ஆசீர்வதிக்கிறார். கொர்நேலியு மிகுந்த பக்தியுள்ளவனாயிருந்தான். மிகுந்த தான தருமங்களை செய்தான். தேவனுக்குப் பயந்தபடியினாலே மிகுந்த நற்கிரியைகளை செய்து வந்தான்.

## தேவபயத்தினால் சோதனைகள் வந்தாலும் உறுதியாக நிற்கமுடியும்

யோபுவைக்குறித்து கர்த்தர் உத்தமனும் சன்மார்க்கனும் தேவனுக்குப் பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாகிய என் தாசனாகிய யோபு என்று சொல்லுகிறார். கர்த்தருக்குப் பயந்து அவன் பொல்லாப்புக்கு விலகினான். கர்த்தருக்குப் பயந்த மனிதன் தீமையான காரியங்களைச் செய்ய முடியாது. தேவனுக்கு விரோதமான காரியங்களைச் செய்ய முடியாது. யோபு தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்படிந்து நடந்தான். பூமியிலே அவனைப்போல உத்தமன் ஒருவனுமில்லை. அவனுக்கு எத்தனை சோதனைகள் இழப்புகள் வந்தபோதிலும் அவன் தேவனைவிட்டு பின்வாங்கிப் போகவில்லை. காரணம் அவன் தேவனுக்குப் பயந்தவனாயிருந்தான். நாம் ஒவ்வொருவரும் அவ்விதமாய் ஜெபிக்கணும். யோபுப்போல ஆண்டவரே நான் உத்தமனாகி பொல்லாப்பான காரியங்களுக்கு விலகி ஜீவிக்க எனக்கு உதவிசெய்யும் என்று நீங்கள் ஜெபிக்கணும்.

## தேவ பயம் நம்மை கீழ்படியச் செய்கிறது

ஆபிரகாம் தேவனுக்குப் பயந்தபடியினாலே கர்த்தர் சொன்ன வார்த்தைக்கு அப்படியே கீழ்ப்படிந்தான். தேவன் அவனுடைய ஒரு மகனை பலியாக கேட்டபோது அவன் கீழ்ப்படிந்து, தன் ஒரே மகனை பலி செலுத்துவதற்கு ஒப்புக்கொடுத்தான். ஒரு மகனை பலியாக செலுத்துவதற்கு ஒப்புக்கொடுத்தபோது தேவன் அவனைச் சந்தித்து

அவனோடு பேசினார். ஆபிரகாமே பிள்ளையாண்டான் மேலே கையைப்போடாதே. நீ எனக்குப் பயப்படுகிறவன் என்பதை இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றார். ஆதியாகமம் 23:12 ஆபிரகாமைக்குறித்து சாட்சி சொன்ன தேவன் நம்மைக்குறித்து சாட்சிகொடுக்க வேண்டுமானால் தேவனுடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும்.

### தேவனுக்குப் பயப்படுகிறவன் ஊழியர்களை கனம்பண்ணுகிறான்

ஒபதியா என்று ஒரு மனிதன் ஆகாப் ராஜாவுடைய பிரதானியாயிருந்தான். அந்த ஆகாப் எலியா தீர்க்கதரிசியை பிடிக்க வேண்டும் என்று தேடி அலைந்தான். அப்பொழுது ஒபதியா எலியாவை சந்தித்தபோது “உமது அடியானாகிய நான் சிறுவயது முதல் கர்த்தருக்குப் பயந்து நடக்கிறவன்” என்று தன்னைக்குறித்து தேவமனிதனுக்கு முன்பாக உமது அடியான் என்று தன்னைத் தாழ்த்தி சாட்சி கொடுக்கிறான் (1 இராஜா.18:12&13). இந்த ஆகாப் ராஜா தீர்க்கதரிசிகளை கொல்ல வகைதேடும்போது ஐம்பது ஐம்பது பேராக நூறு தீர்க்கதரிசிகளை கெபிக்குள் மறைத்து வைத்து பாதுகாத்து அவர்களை போஷித்து வந்தான். நாம் உண்மையாக கர்த்தருக்குப் பயந்து நடப்போமானால் தேவனுக்கு தீர்க்கதரிசிகளை தேவனுடைய ஊழியர்களை கனம்பண்ணுவோம். அவர்களை பாதுகாப்போம், போஷிப்போம்.

### தேவனுக்குப் பயப்படும் பயம் பாவத்தை வெறுத்து ஓடச்செய்கிறது

யோசேப்பு தேவனுக்குப் பயந்ததினாலே போத்திபாருடைய அரண்மனையிலே அவனுடைய மனைவி பாவம் செய்ய தூண்டியபோது அவன் தன்னுடைய வஸ்திரத்தையும் விட்டு வெளியே ஓடிப்போனான். அவன் தேவனுக்குப் பயந்தபடியினாலே வேறு ஒருவரும் அங்கே இல்லாதபோதும் தேவன் என்னைப் பார்க்கிறார் என்று சொல்லி பாவத்தைவிட்டு விலகி ஓடினான். நம்முடைய வாழ்க்கையிலும் உண்மையாக கர்த்தருக்குப் பயந்து நடப்போனால் தீமையான காரியங்களை தேவனுக்கு விரோதமான காரியங்களை விட்டு விலகி ஓட முடியும். மனிதர்கள் நம்மைப் பார்க்காவிட்டாலும் கர்த்தர் நம்மை பார்க்கிறார் என்ற உணர்வு நமக்குள் இருக்கும்.

### தேவனுக்குப் பயப்படுகிறதினால் நாம் பெறக்கூடிய ஆசீர்வாதங்கள்

- நீதி.1:7 யார் கர்த்தருக்குப் பயந்து நடக்கிறார்களோ அவர்களுக்கு தேவன் தம்முடைய ஞானத்தைத் தருகிறார்.
- சங்கீதம் 34:9 தமக்குப் பயந்தவர்களை தேவன் எந்த குறையுமில்லாமல் அற்புதமாக நடத்துகிறார்.
- சங்கீதம் 111:5 தம்முடைய ஆகாரத்தினால் திருப்தியாக்குகிறார்.
- சங்கீதம் 103:17 தம்முடைய கிருபையினால் அவர்களை சூழ்ந்து பாதுகாக்கிறார்.
- சங்கீதம் 115:13; 128:1 தமக்குப் பயந்தவர்களை ஆசீர்வதிக்கிறார்.
- நீதிமொழிகள் 10:27 ஆயுசு நாட்களைப் பெருகப்பண்ணுகிறார்.
- நீதிமொழிகள் 29:25 தம்முடைய உயர்ந்த அடைக்கலத்தில் வைத்து பாதுகாக்கிறார்.

ஆகவே நாம் கர்த்தருக்குப் பயந்து நடப்பதினாலே இன்னும் எத்தனையோ விதமான ஆசீர்வாதங்களை தேவன் நமக்குத் தருகிறார்.

தேவனுடைய பிள்ளைகளே இது கடைசி காலமாக இருக்கிறது. கர்த்தருடைய நாள் சமீபமாக இருக்கிறது. கர்த்தருடைய வருகையிலே நாம் அவரை சந்திக்க வேண்டுமானால் நாம் பூரணப்பட வேண்டும். எல்லா காரியத்திலேயும் பூரணப்பட வேண்டும். பரிசுத்தத்திலே பூரணப்பட வேண்டும். 2 கொரிந்தியர் 7:1-ன் படி பரிசுத்தமாகுதலை தேவ பயத்தோடு பூரணப்படுத்த வேண்டும். ஆகவே இந்த கடைசி நாட்களில் நாம் கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தப்படுவோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.



கர்த்தரின் ஈவாகிய இனிய மணவாழ்வு-3

# புத்துக்குலுங்கும் திராட்சத் தோட்டம் கெடுக்கப்படாமல் காப்போம்

Rev. Dr.T.S. ராஜசேகர்
அகில இந்திய ஏ.ஜி பொது நிர்வாகக் குழு உறுப்பினர்

உன்னதப்பாட்டு நூலிலுள்ள ஐந்து பாடல்களில் முதல்பாடலின் பொருளை, நம் சொந்தத் திராட்சத் தோட்டத்தைக் (நமதுமண வாழ்வை) காத்துக் கொள்வது எப்படி?" என்ற தலைப்பில் 10 ஆலோசனைகளைக் கற்றுக் கொண்டோம். கற்றுக் கொண்டவற்றை அர்ப்பணத்தோடு செயல்படுத்தினால் தான் நம் மணவாழ்வைக் காத்துக்கொள்ளவும், நமது மணவாழ்வை இனிமையானதாக அனுபவிக்கவும் முடியும். இந்த இதழில் இரண்டாம் பாடலின் (2:8-3:5) பொருளை, மணவாழ்வு கெடுக்கப்படாமல் காப்பது எப்படி?என்ற தலைப்பில் கற்றுக் கொள்வோம். அதற்கு முன் இப்பாடலைக் கவிதை வடிவில் பார்ப்போம்.

## இரண்டாம் பாடல் - 2:8 - 3:5

### தலைவி

2:8 என் நேசர் வரும் சத்தம் கேட்கிறது!
இதோ, அவர் மலைகளைத் தாண்டியும்
குன்றுகள்மேல்குதித்தும் வருகிறார்.
2:9 என் நேசர் கலைமானையும் இளமானையும் போன்றுள்ளார்.
இதோ, எங்கள் சுவருக்குப்பின் நிற்கிறார்;
பலகணி வழியாகப் பார்க்கிறார்;
பின்னல் பலகணி ஊடாக நோக்குகிறார்.
2:10 என் நேசர் என்னிடம் பேசுகிறார்.
"என் பிரியமே! எழுந்திரு.
என் பூரணஅழகியே! என்னோடுவா.
2:11 இதோ, குளிர்காலம் கடந்துவிட்டது;
மழை பெய்து முடிந்துவிட்டது,
2:12 நிலத்தில் மலர்கள் தோன்றுகின்றன,
பாடல்கள்பாடும் காலம் வந்துவிட்டது,
புறாக்கள் கூவுவது நாட்டினில் கேட்கிறது,
2:13 அத்திமரங்களில் பழங்கள் கனிகின்றன,
திராட்சக் கொடிகள் பூத்து மணக்கின்றன.
என் பிரியமே! எழுந்திரு.
என் பூரண அழகியே! என்னோடுவா.
2:14 பாறையின் பிளவுகளிலும்
சிகரங்களின் மறைவிடங்களிலும்
தங்கும் என் வெண்புறாவே!
உன் முகத்தை நான் காணட்டும்! உன் குரலை நான் கேட்கட்டும்!
உன் குரல் இனிமை! உன் முகம் அருமை!"

**தலைவனிடம்**

2:15 நம் திராட்சத்தோட்டம் பூத்துக் குலுங்குகிறது;
திராட்சத்தோட்டங்களைக் கெடுக்கும் நரிகளை
குள்ளநரிகளை, நமக்காகப் பிடியுங்கள்.

**தலைவனைப் பற்றி**

2:16 என் நேசர் என்னுடையவர்; நான் அவருடையவள்.
லில்லிமலர்களுக்குள் அவர் மேய்கிறார்.

**தலைவனிடம்**

2:17 என் நேசரே! பகல்விடிந்து நிழல்கள் ஓடும்வரை நீர் திரும்பி
கலைமானையும், மலைப்பகுதி இளமானையும் போன்று என்னோடிரும்.

**தலைவியின் அனுபவம்**

3:1 இரவில் என் படுக்கையில் என்னுயிர் நேசரைத் தேடினேன்!
நான் தேடினேன்! அவரோ காணப்படவில்லை.

3:2 நான் இப்பொழுதே எழுவேன்; நகர் முழுவதும் தேடுவேன்;
தெருக்களிலும், நாற்சந்திகளிலும் என்னுயிர் நேசரைத் தேடுவேன்.
நான் தேடினேன்! அவரோ காணப்படவில்லை.

3:3 நகரைச் சுற்றும் காவலர்கள் என்னைக் கண்டனர்;
"என்னுயிர் நேசரைக் கண்டீர்களா?"எனக் கேட்டேன்.

3:4 நான் அவர்களைக் கடந்ததுமே, என்னுயிர் நேசரைக் கண்டேன்,
அவரை உறுதியாகப் பிடித்துக் கொண்டேன்.
என் தாய்வீட்டிற்கு, என்னைக் கருவாகச் சுமந்தவளின் அறைக்கு
அழைத்துச் செல்லும் வரை அவரை விடவில்லை.

இளம்பெண்களிடம்

3:5 எருசலேமின் இளம்பெண்களே!
கலைமான்கள் மீதும், வனத்தின் பெண்மான்கள் மீதும் ஆணை!
அதற்கான நேரம் வரும்வரை
நேசத்தைத் தட்டிஎழுப்பாதீர்! தூண்டிவிடாதீர்!

முதல் பாடலைப் போன்றே இப்பாடலிலும் மணவாழ்வு ஒரு திராட்சத் தோட்டமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. பூத்துக்குலுங்கும் திராட்சத் தோட்டம் கெடுக்கப்படாமலிருக்க, அதைக் கெடுக்கும் நரிகள் பிடிக்கப்பட வேண்டும். அதைப் போன்ற இனிய மணவாழ்வைக் கெடுப்பவற்றை அகற்ற முயற்சிகள் எடுக்க வேண்டும். நரிகளின் சுபாவம் என்ன? அவை எப்படி திராட்சத் தோட்டத்தைக் கெடுக்கும்? அதை எப்படிப் பிடிப்பார்கள்? என விவரித்து அதைப் போன்றே மணவாழ்வை எவையெல்லாம், யாரெல்லாம் கெடுப்பார்கள், அவற்றை, அவர்களை எப்படி விலக்கவேண்டும் என்று விவரிப்பது, கவிதை வடிவில் கொடுக்கப்பட்டுள்ள ஆலோசனையைப் பொருள்படுத்தும் விதம் அல்ல. இப்பாடலிலேயே கூறப்பட்டுள்ள ஆலோசனையைப் பின்பற்றினால், நரிகளைப் பிடித்தால் திராட்சத்தோட்டம் காக்கப்படுவது போன்று, நம் மணவாழ்வும் காக்கப்படும்.

நம் பொருளாதார நிலையில் நம் தேவைகள் சந்திக்கப்படும் சுமுகமான காலமும், எதிர்பாராத திடீர் தேவைகள் வரும் கடினகாலமும் வருவது இயற்கை.

எனவே, சுமுகமான பொருளாதாரச் சூழ்நிலையின்போது, கடினச்சூழ்நிலைகள் வரும்போது சந்திக்க உதவுவதற்காகப் பணத்தைச் சேமித்து வைக்கிறோம். இதைப்போன்றே மணவாழ்விலும் சுமுகமான காலமும்; பிணக்கும், மனவேற்றுமையும் உள்ள கடினகாலமும் வருவது இயற்கை. நமது மணவாழ்வு கெடுக்கப்படாமல் இருக்க சுமுகமானநாட்களில் என்ன செய்யவேண்டும் என்பதை இப்பாடலின் முதல்பகுதி (2:8-17)யும், கடினமான நாட்களில் என்ன செய்யவேண்டும் என்பதை இப்பாடலின் இரண்டாம் பகுதி (3:1-4)யும் கூறி 3:5ல் இப்பாடல் நிறைவு பெறுகிறது. இப்பாடலின் முதல்பகுதியின் விளக்கத்தை இந்த இதழிலும், இரண்டாம் பகுதியின் விளக்கத்தை அடுத்த இதழிலும். (பக்கங்களின் அளவை மனதில்கொண்டு) ஆராய்வோம்.

பொருளாதாரக் கடின காலத்திற்காக, சுமுக காலத்தில் சேமிப்புக் கணக்கில் (Savings Account) பணம் சேமித்து வைக்கிறோம். இதைப்போன்றே, மணவாழ்வின் கடின நாட்களில் பயன்பட, சுமுகமான நாட்களில் உணர்வுக் கணக்கில் (Emotional Account) அன்பு, ஆதரவு, நெருக்கம் இவற்றை முதலீடு செய்து வைக்கவேண்டும். இந்த சேமிப்பை எப்படிச் செய்வது என்று 2:8-17 வசனங்கள் கூறுகின்றன.

2:8 கணவனோ, மனைவியோ வெளி வேலையிலிருந்து வீட்டிற்கு வரும்போது, வெளியில் சந்தித்த சோர்வுகள், எரிச்சல்களைக் கொண்டு வந்து வீட்டில் கொட்டாமல், நம்மை ஏற்றுக் கொள்ளும், நமக்காகக் காத்திருக்கும் வாழ்க்கைத் துணையிடம் வருகிறோம் என்ற எண்ணத்தை மனதில் இருத்திக் கொண்டு உற்சாகத்தோடும், மகிழ்ச்சியோடும் வீட்டிற்கு வரவேண்டும்.

2:9 மணவாழ்வில் ஆச்சரியத்தையும், எதிர்பார்ப்பையும் தூண்டும் செயல்கள், குறும்புகள் கணவன் மனைவிக்கிடையில் அடிக்கடி நிகழவேண்டும்.

2:10 கணவனும் மனைவியும் ஒருவரையொருவர் பாராட்டும், அருகில் அழைக்கும் அன்பு வார்த்தைகளைப் பேசவேண்டும். நாட்கள் செல்லச் செல்ல மணவாழ்வு கடமைக்காக வாழும் வாழ்வாக மாறிவிடாதிருக்க செல்லப்பெயரால் அழைப்பதும், அன்பாக, இனிமையாகப் பேசுவதும் எப்பொழுதும் காக்கப்படவேண்டும்.

2:11-13 மணவாழ்வு இயந்திர வாழ்வாக மாறிவிடாமல், சுவையுள்ளதாக எப்போதும் இருக்க, அவ்வப்போது நேரம் எடுத்து ஒருவரோடொருவர் நேரம் செலவழிக்கவும், இயற்கையை ரசித்துப் புத்துணர்ச்சி பெறவும் திட்டமிட்டு நேரம் எடுக்க வேண்டும். ஒருவருக்கு வெளியிடங்களுக்குச் செல்வதில் நாட்டமும், மற்றவருக்கு வீட்டிலேயே இருப்பதில் விருப்பமும் இருக்கலாம். ஆனால், மணவாழ்வு சுவையோடிருக்கவும், கடினகாலங்களில் இணைந்து செல்லவும், சுமுகமான நாட்களில் மற்றவரின் விருப்பத்தை நிறைவேற்ற இருவருமே இணைந்து இப்படிப்பட்ட செயல்களில் ஈடுபடவேண்டும்.

2:14 கணவன் மனைவிக்கிடையேயுள்ள உரையாடல்களும், சேர்ந்து செலவழிக்கும் நேரங்களும் உணர்வையும், அன்பையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பவையாக இருக்க வேண்டும். உலகமதிப்பீடுகள், ஊடகங்கள் தெரிவிப்பவையின் அடிப்படையில் இப்படியிருப்பதுதான் அழகு, இதுவே இனிமை என்று கனவு உலகில் மிதந்து, நனவு உலகில் வெறுப்பையும், சலிப்பையும் காட்டாமல், கர்த்தர் நமக்குத் தந்த வாழ்க்கைத் துணையில் உள்ள அழகையும், இனிமையையும் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வது, கர்த்தருக்கு மகிமையையும், நம் மணவாழ்வில் நிறைவையும் தரும்.

2:16 கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் உரிமையானவர்கள் என்ற பெருமித உணர்வு பேச்சிலும், செயலிலும் எப்பொழுதும் வெளிப்படவேண்டும். ஒருவரால் ஒருவர் பெறும் இன்பத்தை உரிமையானதாகவும், இயல்பானதாகவும் அனுபவிக்க வேண்டும்.

2:17 பகல் நேரத்து உரையாடல்களும், செயல்பாடுகளும் மேற்கூறியபடி அமையும்போது, கணவன் மனைவியின் இரவு நேர உறவுகளும் எதிர்பார்க்கப்படுபவையாகவும், இன்பத்தோடு அனுபவிக்கக் கூடியவையாகவும், நிறைவைத் தருபவையாகவும் இருக்கும்.

மணவாழ்வின் சுமுகமான நாட்களில் இவற்றை அக்கறையோடு செயல்படுத்தும்போது கணவன் மனைவியின் உணர்வு வங்கியில் (Emotional Bank) சேமிப்பு அதிகரிக்கும். இந்த சேமிப்பு மணஉறவின் கடினமான காலங்களில் நமக்கு அனுகூலமாக விளங்கும் முதலீடாக அமையும். எனவே, இந்த ஆலோசனைகளை முழுமனதோடு கடைப்பிடிக்க வேண்டும். அடுத்த பகுதியில் பிணக்குகளும், மனவேற்றுமையும் தோன்றும் காலங்களில் எப்படிச் செயல்பட வேண்டும் என்று 3:1-4 வசனங்களிலிருந்து ஆராய்வோம்.

நமது மணவாழ்வு என்றும் பூத்துக்குலுங்க தேவ உதவியோடு அவரது வழிகாட்டுதல்படி நடப்போம்.

---

## சபையைக் குறித்து எனது உறுதிமொழி

1. சபைக்கும் எனக்கும் உள்ள தொடர்புதான் தேவன் எனக்குத் தரும் ஆசீர்வாதம்.
2. நான் என் பிள்ளைகளுக்குத் தரும் சொத்து, அவர்களுக்கும் என் சபைக்கும் உள்ள தொடர்பு ஆகும்.
3. தேவன் என் மேல் அன்பாய் இருப்பதையும், நான் தேவன் மேல் அன்பாய் இருக்கிறேன் என்பதையும் நான் சபைக்குத் தவறாமல் வருவதன் மூலம் நிரூபிக்க முடியும்.
4. என்னில் ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சி காணப்படுகிறது என்பதை நான் சபையில் ஆராதிப்பதே நிரூபிக்கும்.
5. எனக்கு தேவன் மீது தாகம் இருக்கிறது என்பது, நான் சபையில் செய்யும் ஊழியம் மூலம் நிரூபிக்கப்படுகிறது.
6. பரிசுத்த ஜீவியத்துக்கு ஒரு ஆதாரம் சபை.
7. சாத்தான் என்னோடு அதிகமாய் போராடுவதன் பிரதான நோக்கம் என்னை சபையிலிருந்து பிரிப்பதே. அதைமீறி நான் சபையில் நாட்டப்படுவதே ஆசீர்வாதம்.
8. நான் சபையோடு ஐக்கியப்படுவதே தேவனின் பிரதான நோக்கம்.



9. இந்த உலகத்தின் பாடுகளை, நான் சபையில் வந்து ஆராதிப்பதால் பெறும் பெலத்தினாலே ஜெயிப்பேன்.
10. எந்த சூழ்நிலையிலும் நான் சபையை விட்டு விலகமாட்டேன்.
11. என் சுபாவங்களில் மாற்றம், தேவனுடைய சபைக்கு வந்து போவதினாலேயே ஆகும்.



# சபையில் தொழில் செய்பவர்களுக்காக கூடுகைகளை ஏற்படுத்துதல்

## (Business Fellowship)


**Rev. ஜேம்ஸ் வில்லிங்சன்**

பிராந்திய மேற்பார்வையாளர், கோவை பிராந்தியம்

மூத்த போதகர், கோவை சிட்டி ஏ.ஜி. சர்ச்


**“உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அனந்தஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக...” (எபேசியர் 3:10).**

உலகத்திலும் இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் 5 சதவீத Business People தான் ஆளுகைகளை கட்டுப்படுத்துகின்ற செல்வாக்குமிக்க நபர்களாக இருக்கின்றனர். சபை தலைவர்களை உருவாக்கி தேசத்தை ஆளுகிறவர்களாக மாற்றவேண்டும். தேவனின் அனந்தஞானம் சபையிலுள்ள தேவஜனத்திடம் இருக்கிறது. குழப்பம் நிறைந்த தீர்வு இல்லாத கடினமான சூழ்நிலையில் தடுமாறுகின்ற தேசத்தலைவர்களை காண்கிறோம். வேதாகம நாட்களில் யோசேப்பு தேசத்தில் ஏற்பட்ட குழப்பத்திற்கு தீர்வாக மாறினான்.

“பின்பு, பார்வோன் யோசேப்பை நோக்கி: தேவன் இவையெல்லா வற்றையும் உனக்கு வெளிப்படுத்தியிருக்கிறபடியால், உன்னைப்போல விவேகமும் ஞானமுமுள்ளவன் வேறொருவனும் இல்லை” (ஆதியாகமம் 41:39).

1. முதன்முதலில் தேசத்தில் சேமிப்பதைக் குறித்து கற்றுக்கொடுத்தார் .
2. முதன்முதலில் உணவு பண்டங்களை சேமித்து பாதுகாக்கும் தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்தினார்.
3. முதல் முதலில் பொதுவிநியோக முறையை அறிமுகப்படுத்தினார்.
4. முழுஉலகமும், எகிப்தும், இஸ்ரவேலும் அழியாமல் பஞ்சகாலத்தில், கடினமான காலங்களில் ஒரு யோசேப்பின் முன்னறிதல், திட்டமிடுதல் மூலமாக காப்பாற்றப்பட்டது.

தானியேல் 5 ராஜாக்களின் காலத்தில் அந்நிய தேசத்தை வலிமையுள்ள தேசமாக திகழ நிர்வகித்தான். தேவஞானத்தின்படி நிர்வகித்ததாலும் உண்மை உள்ளவனாய் இருந்தபடியாலும் தேசங்களும் ராஜாக்களும் விரும்பும் இன்றியமையாதலைவனாய் திகழ்ந்தான்.

### சபையில் Business people க்கானகூடுகையின்அவசியம்

1. சந்திக்கப்படாத Business peopleயை சந்திக்க வழிவகைசெய்யும்.
2. பொருளாதார ஆசீர்வாதங்களை தேவஇராஜ்ஜிய வளர்ச்சிக்காக பயன்படுத்துதல்.
3. நீதியாய், உண்மையாய் தொழில், வியாபாரம் செய்து சிறப்பாய், வெற்றிகரமாய் Business நடத்த முடியும்.
4. சபையிலுள்ள Business peopleக்குள் இருக்கின்ற திறமைகளை, தனித்தன்மையை (Creative things) உற்சாகப்படுத்தி சாதனையாளர்களாக மாற்றுதல்.
5. தேவராஜ்ஜிய விதிப்படி (Kingdom Principle) வேதாகம ஆவிக்குரிய விதிகளின்படி தொழில் செய்து செழிக்க முடியும் என்பதை உணர்த்துதல்.

6. உண்மையுள்ள, திறமையுள்ள, தேறினவர்களாக உருவாக்கி சமுதாயத்தில் தாக்கத்தை ஏற்படுத்துதல்.
7. ஒரு 1000 பேர்கொண்ட கம்பெனியை விசுவாசி நடத்தினால் அவர்கள் மூலம் ஆயிரம் குடும்பங்களை இரட்சிப்புக்குள் வழிநடத்த முடியும்

விசுவாசிகள் பள்ளிகளை, கல்லூரிகளை, மருத்துவமனைகளை, தொழில் நிறுவனங்களை Entrepreneurs களாக உருவாக்க வேண்டும்.

**எப்படி சபையில் Business People Meeting ஆரம்பிப்பது?**

1. சபையில் Business People-களை, தலைமைத்துவத்திலுள்ள professionals களுக்கு தலைமைத்துவ பயிற்சி கொடுங்கள்.
2. Business People, Professionals ஒன்றாககூடி ஜெபியுங்கள்.
3. சபைக்கு வெளியே உள்ள Business People, Professional களை சபைக்குள் கொண்டு வரகூடுகைகளை ஏற்படுத்த வேண்டும்.
4. இன்றைய கடினமான சூழ்நிலைகளில் வெற்றிகரமாக நடத்துவதற்கு தலைமைத்துவ தலைப்புகளில் (Leadership Topics) போதனை வகுப்புகளை ஏற்படுத்துங்கள். அதோடு சுவிசேஷம் அறிவித்து மெதுவாக சபைக்குள் வழிநடத்துங்கள்.

ஜான் மேக்ஸ்வெல் (John C Maxwell) அவர்கள் 2 நாட்கள் Leadership class எடுத்தால் 1 session தன்சாட்சியோடு வெற்றி வாழ்க்கைக்கு முக்கியமான திறவுகோல் என இயேசுவோடுள்ள உறவு எவ்வளவு அவசியம் என்பதை பகிர்ந்து கொள்வார்கள்

5. வெளியே உள்ள business peopleகளோடு நட்பு பாராட்டுங்கள். அவர்களுக்காக ஜெபியுங்கள். உங்கள் Business field-ல் நீங்கள் அடைந்த வெற்றியை சாட்சியாக பகிர்ந்துகொள்ளுங்கள். அவர்களும் படிப்படியாய் வருவார்கள்.
6. எங்கள் சபையில் Business People களுக்கான கூடுகையை Team Business Meet என Hotelகளில் ஒழுங்கு செய்தபோது பாதிக்குமேல் இயேசுவை அறியாத Business Peopleகள் கடந்து வந்தார்கள். அவர்களுக்காக தொடர்ந்து ஜெபித்தபோது, ஆண்டவர் அவர்கள் வாழ்க்கையிலும் அற்புதம் செய்தார்.அவர்களுடைய Business செழிக்க ஆரம்பித்தது. சபையிலுள்ள Business People-ளே (Leadership Principle) தலைமைத்துவ பண்புகளை கற்றுக்கொண்டு முன்னேற ஆரம்பித்தார்கள்.

இன்று அவர்களில் அநேகர் இந்த Training-ல் மற்றவர்களுக்குப் போதிக்கக்கூடிய நிலையில் தலைவர்களாக வளர்ந்திருக்கிறார்கள்.

சபை சந்திக்கப்படாத இப்படிப்பட்ட தலைவர்களில் கவனம் செலுத்தி, சபைக்குள் கொண்டு வர திட்டமிடுவோம். மாபெரும் அறுவடையை பெற்றுக்கொள்வோம்.

---

2023 ஜனவரி 16, 17
(திங்கள், செவ்வாய்)
**மத்திய வாலிபர் முகாம்**
கேம்ப் சைட், மதுரை

2023 ஜனவரி 26
(வியாழக்கிழமை)
**மண்டல உபவாச நாள்**
அந்தந்த மண்டலங்களில்



# பென்சில் (PENCIL)

Rev. D. சாலமோன்
தலைவர், கிறிஸ்துவின் ஸ்தானிகர்கள் வாலிபர் ஊழியம்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கிறிஸ்துவின் ஸ்தானிகர் இயக்கத்தின் சார்பில் அன்பின் வாழ்த்துக்கள்.

தேவன் கொடுத்த புது ஆண்டிற்காக கர்த்தருக்கு ஸ்தோத்திரம். புத்தாண்டு வாழ்த்துக்களை CA ஊழியங்கள் சார்பாக தெரிவித்துக்கொள்கிறோம். இப்பக்கங்களில் உங்களை வாசிக்க காண்பது மகிழ்ச்சி. தேவனுடைய இராஜ்யத்தில் வாலிபர்கள் மிகவும் ஆசீர்வாதமானவர்கள்; வாலிபர்களுக்கான தேவனின் சித்தமும், திட்டமும் மிகப்பெரியது. பரிசுத்த வேதாகமத்தில் வாலிபர்களுக்காகவும் வாலிபர்களை கொண்டும் தேவன் செய்தவைகள் சாதனைகளாக இருக்கிறது. இப்போதும் அனைவருக்கும் தெரிந்த மற்றும் அனைவராலும் பயன்படுத்தப்படும் **"பென்சில் Pencil"**-ல் இருந்து வாழ்வை வளமாக்கும் பாடங்களை கருத்துக்களை கற்றுக் கொள்வோம்.

### 1. Everything you do will always leave a mark (1தீமோ.5:25)

பென்சிலை ஒருவர் உபயோகிக்கும்போது, அதனை பயன்படுத்தியதற்கான தடயத்தை காணலாம். அதுபோல நம்முடைய வாழ்விலும் நற்கிரியைகளோ, துர்கிரியைகளோ எதைச் செய்தாலும், செய்யாமல் இருந்தாலும் அதன் விளைவை உங்கள் வாழ்க்கையில் காணமுடியும். பரலோக கலாச்சாரத்தில் இந்த பூமியில் வாழ இயேசு கிறிஸ்து உங்களை அழைத்திருக்கிறார். நீதிக்கும் அநீதிக்கும், ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியம் இல்லை என்று வேதம் கூறுகிறது.



உங்களுக்கு ஒரு போராட்டம் இருக்கத்தான் செய்கிறது. அது நல்ல போராட்டம். எனவே உங்கள் செயல்களை குறித்து நீங்கள் கவனமுடையவர்களாய் இருக்க வேண்டும். கொலோ.3:17 வசனத்தின்படி கர்த்தருக்குள் உங்களை காத்துக்கொள்ள வேண்டும்.

### 2. You can always correct the mistakes you make (1யோவான் 1:9)

பென்சிலை வரைதல், எழுதுதல் போன்ற காரியங்களுக்கு உபயோகிக்கும்போது, தெரிந்தோ தெரியாமலோ சில தவறுகள் ஏற்படலாம். (Intentional, non-intentional mistakes). அவ்வாறு நிகழும்போது அதனை சரிசெய்து கொள்ளும் வாய்ப்புகள் உண்டு. அதுபோலவே உங்கள் அன்றாட வாழ்வில் சிந்தை, பார்வை, சொல், செயல் ஆகியவற்றின் மூலம் தவறுகள் ஏற்பட்டாலும் அதனை



மறைக்கவோ, நியாயப்படுத்தவோ, குற்ற உணர்வுகளோடோ அல்ல, மாறாக சரி செய்து திருத்தி கொள்ளும் வாய்ப்புகள் உண்டு. வார்த்தையினால் சொல்ல முடியாத பாவங்கள் இருக்கலாம்; ஆனால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் மன்னிக்க முடியாத பாவம் ஒன்றுமில்லை (நீதி.28:13).

## 3. What is important is what's inside of you (1தீமோ.4:14)

பென்சில்கள் விரும்பப்படத்தக்க நிறங்களில் பயன்பாட்டில் இருப்பதை பார்க்கிறோம். பென்சிலின் தரத்தை தீர்மானிப்பது அதன் வெளித்தோற்றம் அல்ல; மாறாக அதன் உள்ளிருக்கும் கருப்பு நிற ஈயம் (Pencil lead). அது போலவே உங்கள் வெளித்தோற்றம், அறிவுத்திறன், பணம், விலையுயர்ந்த Mobile, Bikes பயன்படுத்துவது, Friends likes, Social Media followers ஆகியவற்றை விட உத்தம குணமாகிய, உண்மை, தாழ்மை, நிதானம், ஒழுக்கம், இச்சையடக்கம், தெளிந்தபுத்தி போன்ற நற்பண்புகள் உங்கள் மதிப்பை தீர்மானிக்கின்றது (மத்தேயு 12:35). உங்கள் நன்மதிப்பை விட உங்கள் நற்சாட்சியே மேலானது. நீங்கள் சரீரப் பிரகாரமாக வளரவும். அதே சமயத்தில் கிறிஸ்துவின் குணநலன்களை காத்துக்கொள்ளவும், வளர்த்துக்கொள்ளவும் வேண்டும்.

## 4. In life you will undergo painful sharpening experience (சங்கீதம் 119:71; புலம்பல் 3:27)

பென்சிலை தொடர்ந்து பயன்படுத்தும்போது அதன் கூர்மை மழுங்கும், அதனை இன்னும் சிறப்பாக பயன்படுத்த Sharpner மூலம் கூர்மையாக்கப்படும். அதுபோலவே இந்த உலகில் நீங்கள் இருக்கும்வரை தேவன் உங்களை கனத்திற்குரிய பாத்திரமாக்க சில கஷ்டமான பாதைகளில் நடத்தி செல்ல நேரிடும்.



சோதனை (Temptation), பரீட்சை (Test), உபத்திரவம் (Trails) போன்றவற்றை குறித்த பகுத்தறிவு உங்கள் வாழ்வில் அவசியமானது. மதிப்புடைய எந்த பொருளும் அதிக சோதனைக்குட்படுத்தப்படும். கிறிஸ்துவின் நிமித்தம் சமுதாயத்தில் நீங்கள் தனிமைப்படுத்தப்படும் நிலை, அவமானம், பரிசுத்த வாழ்வின் வெற்றியே. ஒரு சவாலாக கருதப்படும் நெருக்கடியான காலங்களில் தேவன் உங்களை உருவாக்க அவரை நம்புங்கள். தேவன் என்னை மேன்மையான நோக்கத்திற்காக உருவாக்குகிறார் என்று அவரை நம்பி, அன்புகூர்ந்து அவரிடம் உங்களை அர்ப்பணியுங்கள்.

## 5. To be the best pencil you must allow yourself to be held and guided by the hand that holds you (ஏசாயா 64:8)

பென்சில் யாரால் பயன்படுத்தப்படுகிறதோ அதன் அடிப்படையில் அதற்கு மதிப்பும், விளைவுகளும் ஏற்படும். குழந்தை, மாணவர், ஓவியர், பொறியாளர் என்பவர் பென்சிலை பயன்படுத்தும்போது அவரவர் திறன் பென்சில் மூலம் வெளிப்படும். அதுபோல வாலிபர்கள் நீங்கள் அற்புதமான தேவனின் கரத்தால் பயன்படும்போது நீங்கள் நினைத்து பார்க்க முடியாத நிலையில் தேவன் உங்களை பயன்படுத்துவார்.

உங்கள் தனித்தன்மை, திறமை, ஆக்கபூர்வமான சிந்தனைகளும், சாதிக்க துடிக்கும் நினைவுகளும், தீர்மானத் தடுமாற்றம், உணர்வு வெளிப்பாடுகளில் ஏற்ற தாழ்வு, அங்கீகாரம், அன்பு ஆகிய தேவைகள் அனைத்தையும் நம் தேவன் சந்திக்க வல்லவர். ஏற்ற காலத்தில் அவர் உங்களை உயர்த்தும்படிக்கு அவரது பலத்த கரத்தில் அடங்கி இருங்கள். ஆவியானவருக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். நீங்கள் அடைய முடியாத உயர்வுக்கு உங்கள் அர்ப்பணிப்பு கொண்டு செல்லும். இந்த புதிய ஆண்டில் நீங்கள் எடுக்கும் நல்ல தீர்மானங்கள் ஆசீர்வாதமான புது துவக்கத்தை கொடுக்கும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.



# தீர்மானங்களில் உறுதியாயிருங்கள்
## (BE FIRM IN YOUR RESOLUTIONS)


## Rev.K. ராஜா
இயக்குநர், கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியம்


கிறிஸ்துவில் அன்பான மாணவ, மாணவிகளுக்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கிறிஸ்துவுக்கு மாணவர் ஊழியத்தின் சார்பாக புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

இனிமேல் இப்படி இருக்கமாட்டேன், இப்படித்தான் இருக்கப்போகிறேன் என்றும், இனிமேல் இப்படி செய்ய மாட்டேன். இப்படித்தான் செய்யப்போகிறேன் என்றும் பல சந்தர்ப்பங்களில் புதிய தீர்மானங்களை எடுத்து, கொஞ்ச நாட்கள் அதில் நிலைத்து, பிற்பாடு அதில் நிலைத்து நிற்க முடியாமல் போன அனுபவங்கள் கடந்த காலங்களில் அனைவருக்கும் இருந்திருக்கும்.

ஆனாலும் புதிய தீர்மானங்களை எடுக்காமல் நாம் இருப்பதில்லை. இந்த புதிய ஆண்டிலும் புதிய தீர்மானங்களை எடுத்திருக்கிற உங்களுக்கு வாழ்த்துக்கள். முயற்சி செய்வது தவறல்ல, முயற்சி செய்யாமலே இருப்பது தான் தவறு.

### தீர்மானங்களில் உறுதியாய் நிற்க 10 ஆலோசனைகள்
### (10 COUNSELS TO BE FIRM IN YOUR RESOLUTIONS)

**1. தீர்மானத்தின் நோக்கத்தைப் புரிந்து கொள்ளுங்கள் (UNDERSTAND THE PURPOSE OF RESOLUTION):**

தற்போது நீங்கள் இருக்கும் நிலையிலிருந்து அடுத்த நிலைக்கு உங்களைக் கொண்டு செல்ல, நீங்கள் என்ன செய்ய வேண்டுமோ, அதை செய்யவும், அதில் உறுதியாக இருக்கவும் நீங்கள் எடுத்துக்கொள்ளும் வைராக்கியமே தீர்மானம் ஆகும்.

ஆகவே, தீர்மானத்தின் நோக்கத்தையும், அதன்மூலம் எதிர்பார்க்கும் விளைவுகளையும் தெளிவுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

**2. தீர்மானங்களை மறுஆய்வு செய்யுங்கள் (REVIEW YOUR RESOLUTIONS )**

உங்கள் தீர்மானங்கள் உணர்ச்சி வசப்பட்டு எடுத்ததாக இருக்கக்கூடாது. மற்றவர்களைப் பார்த்தோ, மற்றவர்களோடு ஒப்பிட்டோ எடுத்த தீர்மானங்களாகவும் இருக்கக்கூடாது. மேலும் மற்றவர்களுக்கு போட்டியாகவோ அல்லது மற்றவர்களை திருப்திப்படுத்துவதற்காகவோ எடுத்த தவறான, பொருந்தாத தீர்மானங்களாகவும் இருக்கக்கூடாது. அப்படியானால்,

உங்கள் தீர்மானங்கள் உங்களை அடுத்த நிலைக்கு கொண்டு செல்லுகிற தீர்மானங்களாக இருக்கட்டும்.

உங்களால் சாதாரணமாகவோ, முயற்சி எடுத்தோ செய்ய முடிந்த தீர்மானங்களாக இருக்கட்டும்.

குறிப்பாக தேவனுக்கு உட்பட்ட தீர்மானங்களாக இருக்கட்டும்.

**3. தீர்மானங்களைத் தெளிவாக எழுதுங்கள் (WRITE DOWN YOUR RESOLUTIONS CLEARLY):**

தெளிவாக எடுக்கப்பட்ட தீர்மானங்களை எழுதி எடுப்பது நல்லது. அவைகளை உங்கள் வேதாகமத்தில் வைத்துக்கொள்ளக் கூடிய அளவிற்கு Type செய்து Print out

எடுத்து வைத்துக்கொண்டால் அடிக்கடி அதைப் பார்த்து ஞாபகப்படுத்திக் கொள்ள உதவியாக இருக்கும்.

**4. தீர்மானத்தை உடனே செயல்படுத்த ஆரம்பியுங்கள் (START IMMEDIATELY):**

அளவுக்கதிகமான வேகம் கொள்ளாமலும், அளவுக்கதிகமான தாமதம் காட்டாமலும், அதே நேரத்தில் உடனடியாக செயல்படத் துவங்குகள். செயல்பாட்டைத் தள்ளிப்போடுவது தோல்விக்கு வழி வகுத்துவிடும்.

Start today, work on your Dreams and Soon You will see The Result.

Small Steps each day can make a big difference in the months or years to come.

**5. தோல்விகளைக் கண்டு துவண்டு போகாதீர்கள் (DON'T DISRUPTION IN YOUR FAILURES):**

எடுத்த தீர்மானங்களில் செயல்படத் துவங்கும்போது எதிர்பாராத விதங்களில் தொய்வோ, தோல்விகளோ வரலாம். சோர்ந்து போய்விடாதீர்கள். தொய்வும், தோல்வியும் எதனால் வந்தது என்பதை அறிந்துகொண்டு, அவைகளை மேற்கொள்ள பிரயாசப்படுங்கள்.

If you fail; never give up Because FAIL teaches us
"**F**IRST **A**TTEMPT **I**N **L**EARNING"

**6. தொடர்ந்து முன்னேறுங்கள் (GO AHEAD):**

வெற்றி பெற விரும்புபவன் இடையில் விட மாட்டான். இடையில் விட்டுவிடுபவன் வெற்றி பெற மாட்டான். பொதுவாக வெற்றி என்பது மற்றவர்கள் கைவிட்டுவிட்ட பின்பும், அயராமல் தொடர்வதாலேயே கிடைப்பதாகும். நீங்கள் வெற்றி அடைவதை உங்களைத் தவிர யாராலும் தடுக்க முடியாது. உங்கள் முயற்சியை நிறுத்தாதீர்கள்.

If you can't fly then run, if you can't run then walk, if you can't walk then crawl,
But whatever you do you have to keep moving forward
- Martin Luther king JR

**7. மாற்றங்களை ஏற்றுக்கொள்ளுங்கள் (ACCEPT CHANGES):**

தீர்மானங்களை செயல்படுத்த ஆரம்பிக்கும்போது இதுவரை வெகுகாலமாக நீங்கள் பழக்கப்பட்டுப்போன ஒரு காரியத்தில் (சொகுசான வாழ்க்கை) மாற்றங்கள் வரலாம். அது தேவையான மாற்றமாக இருக்கும் பட்சத்தில் தயங்காதீர்கள். மாற்றங்களை ஏற்றுக்கொள்ளுங்கள். காரணம், மாற்றம் ஒன்றே மாறாதது.

Your Life Doesn't Get Better By Chance; it gets Better By Change.

**8. மதிப்பீடு செய்யுங்கள் (MAKE ASSESSMENT):**

எடுத்த தீர்மானங்களில் உறுதியாக நின்று வெற்றி அடைய எடுத்த முயற்சியில் எந்த அளவிற்கு முன்னேறி இருக்கிறோம்? எங்கே இருக்கிறோம்? என்பதை அவ்வப்போது மதிப்பீடு செய்து பார்த்துக்கொள்ளுங்கள். அப்படி மதிப்பீடு செய்வதுதான் நாம் எங்கே இருக்கிறோம் என்பதைக் கண்டுகொள்ள உதவி செய்யும்.

The First step to Personal growth is the ability to make an honest assessment of where you currently are.

**9. ஆலோசனை பெற்றுக்கொள்ளுங்கள் (GET COUNSEL):**

எடுத்த தீர்மானங்களில் முன்னேறிச் செல்ல முடியாமல் தடுமாறும் தருணங்களில் ஆலோசனை பெற்றுக்கொண்டால் முன்னேறிச் செல்ல முடியும்.

எந்தக் காரியத்திற்கு யாரிடம் ஆலோசனைக் கேட்டால் உதவியாக இருக்குமோ, அவர்களிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ளுங்கள், ஆலோசனையை அசட்டை பண்ணிவிடாதீர்கள்.

● நீதி. 11:14- ஆலோசனை இல்லாத இடத்தில் விழுந்து போவார்கள்.

● நீதி. 15:22- ஆலோசனை இல்லாமையால் எண்ணங்கள் சித்தியாமற்போம்.

(இதற்கு முந்தின இதழில் "ஆலோசனை" என்ற தலைப்பில் கட்டுரை உள்ளது).

## 10. பலனை எதிர்பாருங்கள் (EXPECT RESULT)

நீங்கள் எந்த விளைவை, எந்த முன்னேற்றத்தை எதிர்பார்த்து தீர்மானங்களை எடுத்து செயல்படுத்தினீர்களோ, அந்த விளைவை, அந்த முன்னேற்றத்தை உங்கள் வாழ்க்கையில் எதிர்பாருங்கள். அப்படி எதிர்பார்த்து பலனைப் பெற்றுக் கொள்ளாத பட்சத்தில் எடுத்த அத்தனை தீர்மானங்களும், பிரயாசங்களும் வீணாய் போய்விடுமே. ஆகவே பலனை எதிர்பாருங்கள்.

● 1கொரி. 9:26- ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம் பண்ணேன்.

வேதாகமத்தில் யோசேப்பு, தாவீது, தானியேல் இன்னும் பல தேவ மனிதர்கள் தங்கள் வாழ்க்கையில் தீர்மானங்களை எடுத்து, அதில் உறுதியாக நின்று ஜெயித்தார்கள். உயர்வைக் கண்டார்கள். நீங்களும் அப்படி உங்கள் வாழ்க்கையில் ஜெயிக்க, உயர தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்த வாழ்த்துகிறோம். ஜெபிக்கிறோம். தேவன் தாமே இந்த புதிய ஆண்டில் உங்களை ஆசீர்வதித்து மேன்மைப்படுத்துவாராக. ஆமென்.

---

சிறுவர் பகுதி 36–ம் பக்கத்தின் தொடர்ச்சி ...

அப்புறம், ஒருவருடைய முகத்தில் உள்ள கறையைக் கண்ணாடி காட்டுவதால் அவருக்கு அந்தக் கண்ணாடி மீது கோபமோ, எரிச்சலோ ஏற்படுவது இல்லை. மாறாக அந்தக் கண்ணாடியைப் பத்திரமாக எடுத்து வைக்கிறார் அல்லவா? சரியாகச் சொன்னாய், அதே போல தான் நம்மிடம் உள்ள குறைகளை யாரேனும் சுட்டிக் காட்டினால் அவர் மீது கோபமோ, எரிச்சலோ, பழிவாங்குதலோ இல்லாமல் நன்றி கூற வேண்டும். அப்படிப்பட்டவர்களை பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும். நம்மை சீர்ப்படுத்த இவர்கள் அடிக்கடி தேவைப்படுவார்கள். சுட்டிக்காட்டப்பட்ட குறைகள் நியாயமானது எனில் ஒளிவு மறைவின்றி உங்களை திருத்திக் கொள்ளுங்கள். இது கண்ணாடி கற்றுத்தரும் மூன்றாவது பாடம்.

கண்ணாடி உவமையில் இத்தனை கருத்துக்களா என யோசிக்கிறீர்களா? ஆம், யோசித்தால் இன்னும் பல விளக்கங்கள் கிடைக்கும். அன்பு தம்பி தங்காய், இந்த புதிய ஆண்டில் நம் அன்றாட வாழ்விற்கு அடிப்படையான நடைமுறை விளக்கங்களை இப்பகுதியில் அறிந்திருப்பீர்கள் என நம்புகிறேன்.

'உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு.' (1 தீமோ. 4:12)

மேற்கண்ட வசனத்தை நல்லா தெரிஞ்சுக்கோங்க! கண்ணாடி பாடத்தினை புரிஞ்சுக்கோங்க!! மேலும் இது பற்றிய உங்கள் கருத்துக்கள், சாட்சிகளை உடனே 97503 81784 என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தி அனுப்புங்கள். அடுத்த இதழில் இதுபோன்ற ஒரு சுவாரசியமான கதையோடு சந்திக்கிறேன். ஒன்ஸ் அகேன் ஹேப்பி நியூ இயர்.



சிறுவர் பகுதி

# தெரிஞ்சுக்கோ புரிஞ்சுக்கோ


## பாஸ்டர். பெவிஸ்டன்

பூரண கிருபை ஏ.ஜி சபை, கருப்பாயூரணி, மதுரை-20

Contributing Editor, Paripoorana Jeevan


ஹாய் ஹலோ. வணக்கம்! உங்கள் அனைவருக்கும் ஒளிமயமான புத்தாண்டு வாழ்த்துக்கள்! கடந்த ஆண்டு முழுவதும் நம்மை நடத்தியவர் இனி வரும் நாட்களிலும் நம்மை அற்புதமாய் நடத்துவார். தேவனுக்கு பிரியமான லட்சியத்துடன் தைரியமாய் முன்னேறுவோம். தேவன் நம்மோடிருக்கிறார். சரி, வாங்க கதை கேட்கலாம்.

ஒரு வயதானவர் அடிக்கடி கண்ணாடியைப் பார்ப்பார். பிறகு ஏதோ சிந்தனையில் மூழ்கிவிடுவார். பக்கத்து வீட்டு சிறுவன் ஜன்னல் வழியாக இதனை கவனித்துக்கொண்டே இருந்தான். அந்தக் கண்ணாடியில் அப்படி என்ன தான் இருக்கிறது? பெரியவர் அடிக்கடி அதையே உற்று உற்றுப் பார்க்கிறாரே! ஒருவேளை மாயாஜாலக் கண்ணாடியாக இருக்குமோ என ஆவலைக் கட்டுப்படுத்த முடியாமல் அவன் பெரியவரை நெருங்கினான்.

ஐயா, உங்கள் கையில் இருப்பது கண்ணாடிதானே? ஆமாம் என்றார் பெரியவர். அதில் என்ன தெரிகிறது? 'நான் பார்த்தால் என் முகம் தெரியும், நீ பார்த்தால் உன் முகம் தெரியும்' என்றார் பெரியவர். அப்படியானால் சாதாரணக் கண்ணாடிதானே, பிறகு ஏன் அதையே அடிக்கடி பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்? என சிறுவன் கேட்க, பெரியவர் மெதுவான புன்னகைப்புடன் ' தம்பி, இது சாதாரண கண்ணாடிதான், ஆனால் அது தரும் பாடங்கள் பல' என்றார்.

பாடமா? கண்ணாடியிடம் நாம் என்ன பாடம் பெற முடியும்? எனக் கேட்ட சிறுவனிடம், பெரியவர் பொறுமையாய் பேச துவங்கினார். கண்ணாடி கற்றுக்கொடுக்கும் மூன்று பாடங்களை கற்றுக்கொண்ட பின் ஆச்சரியத்தில் உறைந்து போனான் அச்சிறுவன்.

அப்படியென்ன பாடங்கள்? ஆச்சரியத்தோடு நீங்கள் கேட்பதையும் என்னால் உணர முடிகிறது. தொடர்ந்து வாசியுங்கள், எழுதுகிறேன்.

நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு கண்ணாடி போன்றவர்கள். ஒன்றும் புரியவில்லையா? புரியும் படி கூறுகிறேன்! நம் முகத்தில் ஏதேனும் அழுக்கோ, கறையோ இருந்தால் கண்ணாடியில் அது தெளிவுற தெரிகிறது. அந்தக் கறையைக் கண்ணாடி, கூட்டுவதும் இல்லை, குறைப்பதும் இல்லை. உள்ளது உள்ளபடி காட்டுகிறது அல்லவா? ஆம், அதே போல் உன் சகோதரனிடம் நண்பனிடம் எந்த அளவுக்குக் குறை இருக்கிறதோ அந்த அளவுக்குத் தான் அதனைச் சுட்டிக்காட்ட வேண்டும். எதையும் மிகைப்படுத்தியோ, ஜோடித்தோ சொல்லக்கூடாது. துரும்பைத் தூணாக்கவோ, கடுகை மலையாக்கவோ கூடாது. இது கண்ணாடி சொல்லும் முதல் பாடம்.

அடுத்து, கண்ணாடிக்கு முன்னால் நீ நிற்கும் போது தான் உன் குறையைக் காட்டுகிறது. நீ அகன்று விட்டால் கண்ணாடி மௌனமாகி விடும். அப்படித்தானே? ஆம், அதே போல தான் மற்றவரின் குறைகளை அவரிடம் நேரடியாகவே சுட்டிக்காட்ட வேண்டும். அவர் இல்லாத போது முதுகுக்குப் பின்னால் பேசக்கூடாது. நேருக்கு நேர் தவறை சுட்டிக்காட்ட துணிச்சல் இல்லையெனில் உங்கள் வாயை திறவாதிருங்கள். இது கண்ணாடி கற்றுத்தரும் இரண்டாவது பாடம்.

...சிறுவர் பகுதி தொடர்ச்சி 35-ம் பக்கம் பார்க்கவும்



# தலையெழுத்து-விதி
## (Destiny)

**Rev. பெகின் சாமுவேல்**
இயக்குநர், தமிழ் பிரதேச சிறுவர் ஊழியங்கள்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் இந்த இதழின் வாயிலாக உங்களுக்கு பண்டிகை கால வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். கடந்த வருடத்தில் தேவனுடைய பெரிதான தயவினாலும், கிருபையினாலும் தமிழ்ப்பிரதேச சிறுவர் ஊழியத்தின் மூலமாக நடைபெற்ற அனைத்து ஊழியங்களையும் ஆசீர்வதித்தார். தேவனுக்கே மகிமை உண்டாவதாக. எல்லா ஊழியங்களிலும் எங்களோடு ஒத்துழைத்த, உதவிய, ஜெபித்த அனைத்து கனத்திற்குரிய போதகர்களுக்கும், விசுவாசிகளுக்கும் இயேசுவின் நாமத்தினால் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்து வருகிற நாட்களிலும் செயல்படுத்த இருக்கிற திட்டங்களுக்கு உங்கள் உதவியை நாடி இருக்கிறோம். தேவன் இந்த புது வருடத்தையும் நமக்கு ஆசீர்வாதமாக்கி தருவாராக, நன்மையால் முடிசூட்டுவாராக.

நாம் கடந்த இதழில் என்னென்ன காரியங்கள் நம் எதிர்காலத்தை மாற்றி ஆசீர்வாதமாக்கி தர இயலும் என்று இரண்டு காரியங்களைக் குறித்து பார்த்தோம். இந்த இதழிலும் தொடர்ந்து அதையே தியானிப்போம்.

### 1. எண்ணங்கள் (Thoughts can change your destiny)

அநேக நேரங்களில் அதிகமாக எதையாவது சிந்திக்கிறவர்கள் அதிகமாக கவலைப்படுகிறவர்களாக இருப்பதை பார்க்க முடியும். என் வாழ்க்கை எப்படியாகும்? நான் உயர்வை அடையவே முடியாது, என் பிள்ளைகளின் காரியம் தோல்வியாய் முடிந்து விடுமோ என்று கவலைப்படுகிறவர்களாய் இருந்தால் நீங்கள் செய்ய வேண்டிய முதல் காரியம். உங்கள் சிந்தனைகளை மாற்ற வேண்டும். உங்கள் எதிர்மறையான, சோர்வடையச் செய்கிற எண்ணங்களை மாற்றுங்கள். உங்கள் பிள்ளைகளைக் குறித்தோ, அவர்கள் வாழ்க்கையைக் குறித்தோ தவறான, பயப்படுத்துகிற காரியங்களை சிந்திக்காதீர்கள். யோபு சொல்கிறார், நான் பயந்த காரியம் எனக்கு நேரிட்டது. உங்கள் பிள்ளைகளை அநேக வசனங்களை மனப்பாடம் செய்ய வைத்து அவர்கள் சிந்தைகளை வசனத்தால் நிரப்புங்கள். அப்போது பின்னாட்களில் இந்த எதிர்மறையான எண்ணங்கள் வரும்போது வேத வசனம் அவர்களிடம் பேசி அதீத நம்பிக்கையைக் கொடுக்கும். நமது எண்ணங்கள்தான் நம் செயல்களின் பிறப்பிடம். எனவே உங்கள் எண்ணங்களை மாற்றுங்கள், உங்கள் வாழ்க்கை மாறும். வேதம் சொல்கிறது, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம் (2கொரி.10:5). உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். (ரோமர் 12:2)

### 2. கேட்கிற காரியங்கள் (God's Word can change your destiny)

உலகத்தின் வார்த்தைகளை விட தேவனுடைய வார்த்தைகளை அதிகம் கேளுங்கள். ஏனெனில் உலகம் நம்மை எப்போதும் குற்றஞ்சாட்டி, குறைகூறி, முன்னேறவிடாமல் தடுக்க முயற்சிக்கும். ஆனால் தேவனுடைய வார்த்தைகள் நம்மை ஆறுதல்படுத்தி, உற்சாகமூட்டி உயரப் பறக்க செய்யும். யோபுவின்

நண்பர்கள் அவனுடைய துக்கத்தில் ஆறுதல்படுத்த வந்து பேச ஆரம்பித்தார்கள். ஆனால் அந்த வார்த்தைகள் யோபுவின் துக்கத்தை அதிகப்படுத்தியது. வேதத்தில் உலகத்தின் வார்த்தைகளின்மேல் நம்பிக்கை வைக்காமல் கர்த்தரின் வார்த்தையை விசுவாசித்தவர்களின் வாழ்வில் பெரிய காரியங்களை தேவன் செய்தார். ஆபிரகாம், சாராள் வாக்குத்தத்தத்தை தேவனிடத்தில் பெற்றுக்கொண்டபோது, உலகப் பிரகாரமான நியதிகளின்படி, அவர்களுக்கு குழந்தை பிறக்க வாய்ப்பே இல்லை. யாரிடம் அவர்கள் சொன்னாலும், கேட்டவர்கள் நகைத்திருப்பார்கள். அல்லது நடக்கவே நடக்காது என்று கூறி இகழ்ந்திருப்பார்கள். அதனால்தான் தேவன் அடிக்கடி ஆபிரகாமிடம் பேசி மீண்டும் மீண்டும் நினைவுபடுத்துகிறார். எப்போது தேவனுடைய வார்த்தைகளை விசுவாசிக்க ஆரம்பித்தானோ, அப்போது அவன் வாழ்வு மாறியது. முடியாது என்று நினைத்த காரியம் சாத்தியமானது. உங்கள் வாழ்க்கையைக் குறித்தோ, உங்கள் பிள்ளைகளின் வாழ்வைக் குறித்தோ இவ்வாறு உலகம் சொல்கிற அநேக காரியங்களைக் கேட்டிருப்பீர்கள். அதையெல்லாம் மறந்து தேவன் என்னைக் குறித்து என்ன சொல்கிறார் என்று அவருடைய வார்த்தையைக் கேளுங்கள். உங்கள் வாழ்வு செழிப்பாகும். ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

தலைவிதியை மாற்ற, முதலாவது உங்களை இதில் தியானித்த காரியங்களில், சரிப்படுத்தி மாறுங்கள். மாற்றங்களை இந்த புதிய வருடத்தில் எதிர்பாருங்கள். தேவனுடைய பார்வையில் முடியாது என்று ஒரு காரியமும் இல்லை. நம் வாழ்வை அழிக்க அல்ல, ஆசீர்வதிக்கவே சித்தங்கொண்டிருக்கிறார். கிருபை உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக ஆமென்.

---

## போட்டி எண் : 96 (சரியான விடைகள்)

### கலாத்தியர்

1.விசுவாசமார்க்கத்தார் (3:9); |2.தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் (6:8); | 3.பர்னபா (2:13); |4.உங்களைக் கலக்குகிறவர்கள் (5:12); | 5. ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே (6:8); |6. ஆகார் (4:25).

### எபேசியர்

1.கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல (2:8); |2. பிள்ளைகளே உங்கள் பெற்றோருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள் (6:1);|3.ஸ்தோத்திரஞ்செய்தலே (5:4); |4. அன்பினாலே (4:6); | 5. இவருடைய இரத்தத்தினாலே (1:7) ; |6. அவரைப்பற்றும் விசுவாசத்தால் (3:12)

### பிலிப்பியர்

1.கர்த்தருக்குள் (3:1); | 2.கர்த்தருக்குள் (4:1); |3.கர்த்தருக்குள் (2:24); |
4. கர்த்தருக்குள் (4:10)

### கொலோசெயர்

1. பொய் (3:9) ; |2. உங்களைக் கொள்ளைகொண்டு போகாதபடிக்கு (2:8)
3. மன்னியுங்கள் (3:13) ; | 4. நயவசனிப்பினாலே (2:4)

## போட்டி எண் : 96 (சரியான விடை எழுதியவர்கள்)

**செங்கோட்டை:**L.குளோரி; சித்ரா பிளஸ்சி; G.ஏஞ்சல் அனு பிரின்ஸி; A.ஹெப்சி அன்பு; D.பிரபா; K.பூங்கோதை; M.கனகவல்லி; செல்வி; E.கலா; S.அமுதா கிட்டு; ஜெயசீலின் ஆபிரகாம்; M.ராதாமணி; தாவீது S.மாரிமுத்து; T.சாந்தி; S.இந்திரா குமார்; R.மயில்; G.முத்துலெட்சுமி; R.மாது; M.தங்கமணி; கோகிலா; S.முத்துலெட்சுமி; விஜிராஜா; எஸ்தர் (அச்.பு); மகேஸ்வரி; சுமதி ஜோசப்; கிரிஜா; பியூலா; சாராள் (வே.பு); பிரேமலதா; ராணி

## போட்டி எண் : 96 (சரியான விடை எழுதியவர்கள்)....

பிளசிங்; T.கலா; மரகதம்;|**கடையநல்லூர்** : M.வினோலியா; செல்வி இந்திராணி; G.ஸ்டெல்லா; மேரிகுட்டி; தங்கராஜ்; சீதாலெட்சுமி;| **ஸ்ரீவில்லிபுத்தூர்** :அனிதா; J.வசந்தா; செல்வி; நித்யா; சத்யா; N.ஜெயராணி; K.நெல்சன் செல்வராஜ்; K.பாஞ்சாலி Tr.; எஸ்தர் இந்திரா; ஜேஸ்மின் ரூபி;S.விக்டர் பிரேம்|**புதுகோட்டை** : பெனாயா; மகேஸ்வரி; A.லலிதா;|**திருநின்றவூர்** : S.அனிதா; J.அனுலா; J.வின்சி; ஜென்ஸி ஜோயல்; T.ஜெயராஜ்;|**அச்சிறுப்பாக்கம்**: S.ரேஷ்மா சாம்ராஜ்; A.செல்வகுமாரி; K.பவித்ரா; K.லதா; ஜென்ஸி ஜோயல்; சுதா சார்லின்; P.திரேசா; K.பவித்ரா; A.செல்வக்குமாரி;|**இறச்சகுளம்** : R.K.ஷாலினி; M.கலா; P.ஜெஸ்மின்; V.ராதிகா; P.எஸ்தர்; T.ஷோபா;|**ஆறுமுகநேரி** : பிரேமா கணேசன்; அன்சி ரத்னம்; ஜோதிமீனா; M.செல்வபிரியா; சுகிர்தா டைட்டஸ்; எஸ்தர் வெண்ணிலா;|**நாகர்கோவில்** : இவாஞ்சலின்; S.ஏஞ்சல்குமார்;|**எடப்பாடி**: புஷ்பா; சுதா; B.பிரியா;|**குற்றாலம்**: R.வேளாங்கனி;|**நாசரேத்**: G.எஸ்தர்; மெர்ஸி;|**தூத்துக்குடி**: R.பனிமலர்; J.புரூசிமா; R.சில்வெஸ்டர்;|**ஓசூர்**: ஜடா மனோகரன்; ஜெமிந்தா;|**வில்லியனூர்**:L.எஸ்தர் சுரேஸ்; L.புரோனிக்கா; P.பூங்குழலி; S.மல்லிகா; அலெக்ஸியா; | **தஞ்சாவூர்** : M.தேவகுமார்;|**ஆலங்குளம் (வி)** : A.ஸ்டெல்லா மேரி; ரெஜினா சாரு; R.V..பிளாரன்ஸ்; கிருபா;|**சுரண்டை** : K.குளோரி ஞானம்;|**பெருங்குளம்** : S.பவித்ரா; ஜெயலின் சிங்; பியூலா ஜோகை;|**குலசேகரமங்கலம்** : S.ஏஞ்சல் ஜெபசங்கர்;|**சென்னை**: மெர்லின்; D.ஹெலன் பிரிதியா;|**கொட்டிவாக்கம்** : அமுதவல்லி; அஞ்சலி; எஸ்தர் விஜயராணி; சாமுவேல்;|**சித்தாளப்பாக்கம்**: ரேணுகா;|**அரும்பாக்கம்** : சற்குணம் பூபதி; M.முத்துலெட்சுமி; A.மேரி;|**குறிச்சி**: ரேச்சல் மனாசே;|**இடைகால்**: J.சித்ரா;|**குரோம்பேட்டை** : R.தாமரை செல்வி; கோமதி குமார்;|**கடாட்சபுரம்**: S.ரேவதி கில்பர்ட்;|**காயல்பட்டிணம்**: S.அன்னவடிவு;|**சேத்துப்பட்டு**: ஜெபா ஹெலன்; செல்வி பெர்சியாள்;|**டெலானிபூர்**: L.ஸ்டெல்லா மேரி;|**மன்னார்குடி** : K.அருண்; A.ஷீபா;|**V.K.புதூர்** : S.கலா;|**பழனி** : T.பிரீத்தி; R.மாரியம்மாள் ராஜு; V.லட்சுமி அசோக்;|**அம்பை**: A.பத்மாவதி; |**ஆண்டிபட்டி** : அமலி ஜான்சி ஸ்டீபன்; தபீத்தாள் ராணி; J.மேரி; ரூபவதி;|**நெல்வாய்** : K.கலையரசி; இன்பகனி; மலர்விழி; வெஸ்லி விஜயகுமார்;|**கள்ளக்குறிச்சி** : ரூத்; தங்கம் சாக்கோ; வசந்தி இராஜகுமாரி;|**கோயம்புத்தூர்**: D.சங்கீதா; குளோரிபால்;|**திருச்செந்தூர்** : அலீஸ்; A.தேவதாஸ்;| **திருப்பூர்**: A.இயேசையன்;|**சின்னாளப்பட்டி** : M.சலோமி;|**மடத்துக்குளம்**: C.பரிமளா; A.ஸ்டெல்லா மேரி;|**நீலகிரி**: S.சார்லஸ்; P.கவிதா (கெட்டி); புஸ்பமாலா;|**ஆத்தூர்** : G.லில்லி;|**திண்டிவனம்**: சாராள் அறிவுச்செல்வி;|**தேனி**: பகவதி ஏசுராஜா; J.கிருபா; திரவியச்செல்வி; கார்த்திகேயாயினி; பூமணி ஜான்ஸி;|**சேலம்**: கண்ணகி;|**கம்பம்**: ஜோதிமணி; **ஒட்டப்பிடாரம்** : N.சுப்பிரமணியன்; சரஸ்வதி; S.புஷ்பராணி;|**வால்பாறை**: M.வளர்மதி;|**கானத்தூர்** : அனிதா நெல்சன்; **அச்சரப்பாக்கம்** : விஷ்ணு பிரியா;|**கூவத்தூர்** : C.எட்வர்ட்; |**தர்மபுரி** : ரூத்; ஜாஸ்மின் அ.மாதம்மாள்;|**ஜலகண்டபுரம்** : ஜான் வெஸ்லி; A.கவிதா;|**உத்திரமேரூர்** : J.ஜூலியட்;|**கும்மிடிப்பூண்டி**: G.இம்மானுவேல்;|**வத்திராயிருப்பு** : A.கல்பனா; S.சிவகாமி; S.ஜெஸ்ஸி;|**திருச்சி**: K.சாந்தி;|**இராமன்புதூர்** :அன்னம்மாள்;|**பெங்களூர்**: தேவபிரியா;|**நாகப்பட்டினம்**: வின்சென்ட்ராஜ்;|**வடக்குகோணம்**: மரியநேசம்;|**வல்லம் (தஞ்சாவூர்)** : விஜி ஜெயராஜ்;|**அம்மம்பாளையம்**: கன்னியப்பன்;|**மூக்குபீறி**: T.செல்லத்தாய் ராணி;|**புதியம் புத்தூர்**:P.மகேஷ்வரி;|**மதுரை**:லூயிஸ் மேரி; நற்குணம் மேரி; J.அமுதா;|**களக்காடு** : T.ரோஸ்லின்; ஜெயமெர்சி;|**ஆவடி** : சந்திர சாலமோன்ராஜ்; ஜீவா பீரீடா;|**K.T.C.நகர்**: அருணா; ரத்னா;|**வெளிப்பாளையம்**: M.வசந்த் கோகிலம்;|**மடத்தூர்**: ஷீபா டேவிட்; | **தச்சூர்**: கோமதி; துளசிமணி;|**கடலையூர்** : ஆபிரகாம்;|**பாப்பணம்பட்டி** : சேசுமேரி;|**ஆழ்வார்குறிச்சி**; R.ஹரிலீலா; |**புதூர் (தூத்துக்குடி)**;S.கீர்த்தனா;|**தேவகோட்டை**: பிராங்ளின்;|**வடவள்ளி**: கிறிஸ்டினா அபிகாயில்;|**கிச்சிப்பாளையம்**: கிறிஸ்டல் ஜான்; விஜய்;|**வடக்கு காட்டூர்** : S.கணபதி.

## பரிபூரண ஜீவன் போட்டி எண் -97

## (1 தெசலோனிக்கேயர், 2 தெசலோனிக்கேயர், 1 தீமோத்தேயு, 2 தீமோத்தேயு, தீத்து) இருப்பிடத்துடன் விடை எழுதவும்

1. நீங்கள் ________ பிழைத்திருப்போம்.
2. இவ்விதமாய் ________ மாதிரிகளானீர்கள்.
3. தேவன் ________ அழைத்திருக்கிறார்.
4. விசுவாசிகளாகிய ________ தேவனும் சாட்சி.
5. எல்லாவற்றையும் ________ பிடித்துக் கொள்ளுங்கள்.
6. உங்களை ________ தேவனுக்கு நீதியாயிருக்கிறதே.
7. சகோதரரே ________ சோர்ந்து போகாமலிருங்கள்.

1. கற்பனையின் ________
2. எல்லா மனுஷரும் ________
3. தன் சொந்தக் குடும்பத்தை ________
4. சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது ________
5. போதுமென்கிற ________
6. ஒருவன் தன் சொந்த ________
7. தேவன் நமக்குப் ________
8. அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் ________
9. நல்ல போராட்டத்தைப் போராடினேன் ________
10. மேலும் ஒருவன் ________

1. ________ அசுத்தமாயிருக்கும்.
2. ________ இரட்சித்தார்.
3. ________ ஒப்புக்கொடுத்தார்.

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் 5.2.2023

சரியான விடை எழுதி அனுப்புகிறவர்கள்
தங்கள் முழு முகவரியுடன் விடையை எழுதி அனுப்பவும்.



**விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

**Mrs.சாந்திபால்**
16/50 கொல்லம் மெயின் ரோடு, சீயோன் ஏ.ஜி. சர்ச்
SETC BUS டிப்போ அருகில், செங்கோட்டை - 627 809
தென்காசி (மாவட்டம்). செல் : 88077 18002

# EVANGELISM AND CHURCH PLANTING SEMINAR

## CHENNAI ZONE



## PONDICHERRY ZONE



## SALEM ZONE



## VELLORE ZONE



Registered News Paper Regd. No. 8206 / 62




# எழுப்புதலின் 10 ஆண்டுகள்

## DECADE OF REVIVAL
## 2021-2030

ஜெபிப்போம்! செயல்படுவோம்! சுதந்தரிப்போம்!

BOOK POST

If Undelivered please return to
**PARIPOORANA JEEVAN**
30, Navalar Nagar, Madurai - 625 016. Ph: 0452 4200664